


கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 91 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 23 – வியாழக்கிழமை 09 நவம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 91: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 23 - Thursday 09 November 2023 - Dak 8 Pages ₹ 5.00


### மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க

## ஆளுநருக்கு உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு!

### உச்சநீதிமன்றத்தில் நாளை விசாரணை!



புதுடெல்லி, நவ. 9 - சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க உத்தரவிடக் கோரி, ஆளுநருக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனு நாளை விசாரணைக்கு வருகிறது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது.

குறிப்பாக, சட்ட மன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ள பல்வேறு மசோதாக்களுக்கு, ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி அம்மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவில், சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த மனுவை விரைவாக விசாரிக்க வேண்டுமென்று, மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிரான தமிழ்நாடு அரசின் மனு, நாளை (10ஆம் தேதி) உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப் படவுள்ளது.

தலைமை நீதிபதி சந்திரசூட், பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய 3 நீதிபதிகள் அமர்வில் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

இதேபோல், ஆளுநர்களுக்கு எதிராக பஞ்சாப் மற்றும் கேரளா அரசுகளும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மணிப்பூரில் மீண்டும் கலவரம்!

### துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி!

இம்பால், நவ. 9 - மணிப்பூர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மீண்டும் வன்முறை சம்பவங்கள் அரங்கேறிய நிலையில், துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் பலியாகியுள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தின் இம்பால் மேற்கு மாவட்டத்தில் கடந்த 5 ஆம் தேதி முதல் 2 மாணவர்களைக் காணவில்லை. அவர்களை கண்டறிய வலியுறுத்தி பல இடங் களில் போராட்டம் நடந்தது. அந்த போராட்டங்களில் வன்முறை ஏற்பட்டது.

மேலும், போராட்டத்தின் இடையே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில், இரண்டு காவலர்கள் உள்பட 8 பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதனிடையே, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் திடீரென காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகி பதற்றத்தை அதிகரித்துள்ளது.

### திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை மெய்ப்பிக்கும் இருசெய்திகள்!

## கல்வி-மருத்துவத் துறைகளின் சாதனைகளுக்கான வெற்றி மணிமகுடம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!




சென்னை, நவ.9 -

திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை மெய்ப்பிக்கும் இரு செய்திகள் இந்த வாரம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இது கல்வி, மருத்துவத்துறைகளின் சாதனைகளுக்கான சான்று மட்டுமல்ல; வெற்றி மணிமகுடம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்த வாரம் ஊடகங்களில் வெளியான இரு செய்திகளை உங்களுடன் பகிர்கிறேன்.

கல்வியும், மருத்துவமும்தான் திராவிட மாடலின் இரு கண்கள் என்பதை நான் அடிக்கடி சொல்வதுண்டு. அதனை மெய்ப்பிக்கும் வகையிலான



Government hospitals have earned 50% of the claims under CM's insurance scheme in 2023-24

Over 3,300 government school students apply for CLAT through Naan Mudhalvan scheme

செய்தி 1: நான் முதல்வன் திட்டத்தின் கீழ், 3300 அரசுப் பள்ளி மாணவர்கள் CLAT தேர்வெழுதுவதற்கான விண்ணப்பக் கட்டணம் நான்காயிரம் ரூபாயை அரசே செலுத்தி, அவர்களுக்கு இலவசப் பயிற்சியையும் வழங்கவுள்ளது.

நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களிலும், அரசின் உயர் பொறுப்புகளிலும் நமது மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக நாம் மேற்கொண்டு வரும் பல திட்டங்களில் ஒரு சிறுதுளிதான் இது.

செய்தி 2: நாட்டிற்கே முன்னோடியாக 2009இல் தலைவர் கலைஞர் அவர்கள் ஏழை எளியோரின் உயிர் காக்கும் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வழிகாட்டினார். 2015-16இல்தான் ஒன்றிய அரசு இப்படி ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தற்போது CMCHISஇல் நமது அரசு மருத்துவமனைகள் இந்தியாவிலேயே எந்த மாநிலமும் நிகழ்த்தாத சாதனையை நிகழ்த்தியுள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் பயனடைந்தவர்களில் 50 விழுக்காட்டினர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது நமது கல்வி, மருத்துவத் துறைகளின் சாதனைகளுக்கான சான்று மட்டுமல்ல; வெற்றி மணிமகுடம்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சல்லடை போட்டுத் துளைத்தும்,எனது வீட்டிலிருந்து ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை!

# ரெய்டுகளைக் கண்டெல்லாம் தி.மு.க.பயப்படாது!

## வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் எ.வ.வேலு பேட்டி - கண்டனம்!

**திருவண்ணாமலை, நவ. 9 -**

**சல்லடை போட்டுத் துளைத்தும், எனது வீட்டில் இருந்து ஒரு ரூபாய் கூட கைப்பற்றப்படவில்லை என்றும், ரெய்டுகளைக் கண்டெல்லாம் தி.மு.க. பயப்படாது எனவும், வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டியில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**செய்தியாளர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பேட்டி வருமாறு: -**

இந்த 5 நாள் பிரச்சினைகளுக்கு விளக்கம் தர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் இந்த ஐ.டி. ரெய்டு என்பது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அது அவர்களுடைய கடமை. அதாவது நிர்வாகங்களாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும் ஐ.டி. ரெய்டு வருவது என்பது அவர்களுடைய கடமை. அதனால் வருகிறார்கள். அதை நான் தவறு என்று சொல்ல விரும்பமாட்டேன். அது அவர்களுடைய பணிகள்.

**எனது உதவியாளருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினர்!**

ஆனால் 5 தினமாக ஐ.டி. ரெய்டு என்ற பெயரில் என்னுடைய நேர்முக உதவியாளர் சுப்பிரமணி என்பவரை சென்னையில் தனியாக வைத்து என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள். அவர்தான் கோப்புகள் எல்லாம் பார்க்கும் பி.ஏ. அவரிடம் கோப்புகளை பற்றியும், எங்கு எங்கெல்லாம் இடம் வாங்கி இருக்கிறார் என்பதைப் பற்றியும் இப்படி எல்லாம் பல்வேறு



கேள்விகள். கேள்வி கேட்பது தவறல்ல. அவரை அவ்வளவு தூரம் அச்சுறுத்தி அவர் வழக்கறிஞர், அரசாங்கத்தில் இருந்து Under Secretary வரை இருந்தவர் அவர். பல கோப்புகளை பார்த்தவர்.

அவர் கண்ணீர் விட்டு அழும் அளவிற்கு அவரை நிர்பந்தப் படுத்தி அவரிடத்தில் 4 தினங்களாக நேற்று வரை. அதற்கு பிறகு என்னுடைய ஓட்டுநர். முதல் நாள் சென்னையில் இருந்து வந்திருக்கிறேன். அதன் ஓட்டுனர்.

**அமைச்சருக்கு வண்டி ஓட்டுவது தவறா?**

மறுநாள் அவரை அழைத்துக்கொண்டு இன்றைக்கு மாலையில்தான் அவரை விட்டார்கள். அவரையும் தனிமைப்படுத்தி, - ஒரு அமைச்சருக்கு வண்டி ஓட்டுவது தவறா? - அவரைத் தனிமைப்படுத்தி, என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். டிரைவருக்கு வண்டி ஓட்டுவதுதான் வேலை. அரசாங்கத்தில் அவர் சம்பளம் பெறுகிறார். அவரிடம் 5 நாட்களாக விசாரணை.

அதேபோல், உங்கள் எல்லோருக்கும் தெரியும். நான் கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறேன். என் மனைவி தனியாக இருக்கிறார்.

என்னுடைய 2 பிள்ளைகள் தனித்தனியாக இருக்கிறார்கள். எல்லோருமே இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி. என் மனைவி இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி. என் பெரிய மகன் இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி. என் சிறிய மகன் இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி. அவரவர்கள் தனித்தனியாக இருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக ஜொலிக்கும் அமலாக்கத்துறை!


### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜீன கார்கே விமர்சனம்!

குவாலியர், நவ. 9 -

பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக அமலாக்கத்துறை ஜொலிப்பதாக, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜீன கார்கே கடுமையாக விமர்சித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில், காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜீன கார்கே பேசினார்.

அப்போது, மத்தியப்பிர




தேசத்தில் காங்கிரசுக்கு தொகுதிக்கு ஒரு வேட்பாளர் தான் இருக்கிறார்.

ஆனால், பா.ஜ.கவுக்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 4 வேட்பாளர்கள் உள்ளனர். கண்ணுக்குத் தெரிந்த பா.ஜ.க. வேட்பாளர் ஒருவரும், கண்ணுக்கு தெரியாத மேலும் 3 வேட்பாளர்கள் உள்ளதாகவும் சாடினார்.

முதல் நபராக அமலாக்கத்துறை, பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக ஜொலித்து வருவதாகவும், இரண்டாவது நபராக, சி.பி.ஐ. எதிர்க்கட்சி வேட்பாளர்களை பலவீனப்படுத்த முயன்று வருவதாகவும், மூன்றாவது வேட்பாளராக வருமானவரித்துறை திகழ்வதாகவும் கார்கே விமர்சித்தார்.

காங்கிரஸ் கட்சி நாட்டுக்கு என்ன செய்தது என்று பிரதமர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் காங்கிரஸ் பாதுகாத்ததால்தான், மோடி தற்போது பிரதமராக உள்ளதாக குறிப்பிட்டார்.

ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் மல்லிகார்ஜீன கார்கே தெரிவித்தார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 09-11-2023

# “மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல”

தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் ஆகிய மாநில அரசுகளின் சார்பில் அந்தந்த மாநில ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. ‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல நீங்கள் என்பதை உணருங்கள்’ என்று ஆளுநர்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறது உச்சநீதிமன்றம். இதை விட நெத்தியடி இருக்க முடியாது. ‘ரொம்ப ஆடாதீர்கள், அடங்குங்கள்’ என்பதுதான் இதன் உள்ளடக்கம் ஆகும்.

**பாரதிய ஜனதா கட்சி, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஆளுநர்கள் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறது. எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் ஆளுநர்களாக வருவதால், அவர்கள் எஜமானர்களின் உத்தரவுக்கு கட்டுப்பட்டுச் செயல்படுகிறார்கள். தங்களுக்கு ஏதோ தகுதிகள் வந்து விட்டதைப் போல நினைத்து ஆட்டங்கள் போடுகிறார்கள். ஒரு மாநிலத்துக்கு ஆளுநராக வந்துவிட்டதாலேயே, அந்த மாநிலமே தங்களுக்குச் சொந்தம் என நினைத்துக் கொள்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கிறது என்பதையே மறந்துவிட்டு, தாங்கள் ஏதோ மக்கள் தலைவர்களைப் போல நடந்து கொள்கிறார்கள்.**

**அதுவும் தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள் என்பவை அத்துமீறியதாக மட்டுமல்ல, அருவெறுப்பானவையாகவும் இருக்கின்றன. மாநிலத்தின் நன்மைக்காகத் துரும்பைக் கூட நகர்த்தாத அவர், தமிழ்நாட்டுக்கான கெடுதல்களை வரிசையாகச் செய்து வருகிறார். தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் பெருமைகளைச் சிதைப்பது ஒன்றையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளார். எதையாவது சொல்லி, மாநிலத்தில் குழப்பம் ஏற்படுத்துவதே அவரது வேலையாக இருக்கிறது. பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கும் அவருக்கும் தான் இப்போது போட்டி என்று சொல்லத் தக்க வகையில் ஆளுநர் செயல்பட்டு வருகிறார். அதேநேரத்தில், மாநில நிர்வாகம் அனுப்பும் கோப்புகளை தாமதப்படுத்தியும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களுக்கு அனுமதி தராமலும் தனது அரசியல் சட்டக் கடமைகளைக் கூடச் செய்யாமல் சதி செய்கிறார்.**

எத்தனையோ முறை - எவ்வளவோ வகை உணர்த்திய பிறகும் ஆளுநர் ரவி, உணர்வதாகத் தெரியவில்லை. திருந்துவதற்கான அறிகுறி இல்லை. இதன் இறுதிக் கட்டமாகத்தான் அவர் மீது உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது தமிழ்நாடு அரசு. இதே போலத் தான் கேரளாவின் நிலைமையும், பஞ்சாப் மாநிலத்தின் நிலைமையும்.

பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடக்கிறது. மாண்புமிகு பகவந்த் மான், முதலமைச்சராக இருக்கிறார். தமிழ்நாட்டில் ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் தான், இப்போது பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநராக இருக்கிறார். பஞ்சாப் மாநில அரசு அனுப்பி வைக்கும் சட்டமுன் வடிவுகளுக்கு அனுமதி தராமல் நிறுத்தி வைத்தார் ஆளுநர் பன்வாரிலால். கடந்த அக்டோபர் 20 ஆம் தேதி தாக்கல் செய்ய வேண்டிய மூன்று நிதி மசோதாக்களை நிறுத்தி வைத்து விட்டார் ஆளுநர். சட்டசபை கூடுவதற்கு முந்தைய நாள் - அதாவது அக்டோபர் 19 ஆம் தேதியன்று, மாநில அரசுக்கு ஆளுநர் ஒரு கடிதம் எழுதுகிறார். அந்த மசோதாக்களை ஆய்வு செய்ய வேண்டி உள்ளது என்று அதில் குறிப்பிட்டு இருந்தார் ஆளுநர்.

சட்டசபையைக் கூட்டக் கூடாது என்றும் ஆளுநர் தடை போட்டார். அதனால் சபை கூடிய சில மணிநேரங்களிலேயே ஒத்தி வைக்கப்பட்டது. இப்படி பல்வேறு குழப்பங்கள் நடக்கிறது பஞ்சாப் மாநிலத்தில். இதனைத் தடுக்கவே உச்சநீதிமன்றத்துக்கு போனது பஞ்சாப் அரசு. “சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும்” என்று கோரியது பஞ்சாப் அரசு. உடனே, ஆளுநர் என்ன செய்தார் தெரியுமா? நிறுத்தி வைக்கப்பட்ட மூன்று நிதிமசோதாக்களில் இரண்டைக் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டார்.

இதையே உச்சநீதிமன்றம் கேள்வியாகக் கேட்டது. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வில் மாட்டிக் கொண்டார் பஞ்சாப் ஆளுநர். “சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குமாறு ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயத்துக்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டு இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது. இப்பிரச்சினை உச்சநீதி மன்றத்துக்கு வந்த பிறகு தான் ஆளுநர்கள் செயல்படுகிறார்கள். இதே போலத்தான் முன்பு தெலுங்கானா ஆளுநரும் நடந்து கொண்டார். மாநில அரசு அனுப்பும் மசோதாக்களை ஆய்வு செய்யலாம். ஆனால் வழக்கு உச்சநீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்பாக ஒப்புதல் தர வேண்டும்” என்று சொன்ன நீதிபதிகள்...

**“தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல என்பதை ஆளுநர்கள் மறந்துவிடக் கூடாது” என்று எச்சரிக்கையாகவும் கிண்டலாகவும் சொல்லி இருக்கிறார்கள். மாநில ஆளுநர்களுக்கு முதலில் அறிவுறுத்த வேண்டியது இதுதான். இது ஒரு நியமனப் பதவி. தங்களை அண்டி இருப்பவர்களை திருப்திப்படுத்து வதற்காகத் தரப்படும் டம்மி பதவி. ‘இது ஒரு வேஸ்ட்டான பதவி’ என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். அதுதான் உண்மை. ‘நீயே அயிரை மீன், உனக்கு ஏன் விலாங்குச் சேட்டை?’ என்று ஒரு முதுமொழி உண்டு. அதனை ஆளுநர்களாக வருபவர்கள் உணர்வது இல்லை.**

**தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைப்பட்ட 14 சட்ட முன் வடிவுகளுக்கு அனுமதி தராமல் ஊர் சுற்றிக் கொண்டு இருக்கிறார் ஆளுநர் ரவி. இதுபோல் 8 மசோதாக்களுக்கு அனுமதி தராமல் கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான் அனுமதி தரவில்லை. வழக்கு போட்ட பிறகு பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் செயல்படத் தொடங்கி இருக்கிறார். இந்த வழக்குகள் அனைத்தும் மொத்தமாக வரும் 10 ஆம் தேதி விசாரணைக்கு வர இருக்கின்றன. இதன்பிறகாவது தமிழ்நாடு ஆளுநர் திருந்துகிறாரா எனப் பார்ப்போம்.**

●●

## தீபாவளியையொட்டி சிறப்பு ரயில்கள் இயக்கம்!

சென்னை, நவ. 9-
தீபாவளி பண்டிகையை யொட்டி கூட்ட நெரிசலை குறைக்கும் வகையில், சென்னை - நெல்லை இடையே நவம்பர் 9ம் தேதி சிறப்பு வந்தே பாரத் ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை எழும்பூரில் இருந்து காலை 6 மணிக்கும், நெல்லையில் இருந்து பிற்பகல் 3 மணிக்கும் புறப்படுகிறது.

இதுகுறித்து வெளியான அறிக்கையில்; “சென்னை எழும்பூர் - திருநெல்வேலி தீபாவளி சிறப்பு வந்தே பாரத் விரைவு ரயில் எண் 06067 சென்னை எழும்பூரில் இருந்து நவ.9ஆம் தேதி காலை 6 மணிக்குப் புறப்பட்டு மதியம் 2.15 மணிக்கு திருநெல்வேலி சென்றடையும்.

எண் 06068 திருநெல்வேலி - சென்னை எழும்பூர் தீபாவளி சிறப்பு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் திருநெல்வேலியில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு புறப்பட்டு இரவு 11.15 மணிக்கு சென்னை எழும்பூரை சென்றடையும். இந்த ரயில் தாம்பரம், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும்” என தெரிவிக்கப் பட்டுள்ளது.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நேற்று முன்தினம் (07.11.2023) தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ரா (கேல் ரத்னா விருது), டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் (கேல் ரத்னா விருது ), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் இராமசந்திரன் மற்றும் டாக்டர் அசோக் சிகாமணி, டாக்டர் தாமஸ் பேட்,மார்க் கிங், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி துணை வேந்தர் வெங்கடாச்சலம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.சுந்தர், அப்போலோ மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஓசூரில் வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர் பதனக் கிடங்கு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்! அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, நவ. 9 -
கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் ரூ.4 கோடி மதிப்பில் 1 கோடி வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு திறந்து வைத்து 788 பட்டு விவசாயிகளுக்கு ரூ.19 கோடியே 47 லட்சம் மானியம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

விழாவில் அமைச்சர் அவர்கள் பேசியதாவது “நம் நாட்டு மக்களின் பாரம்பரிய உடையாக திகழ்வது பட்டு என்பதை யாரும் மறுக்க முடியாது அப்படி சிறப்பு வாய்ந்த பட்டு துணிக்கு மூல ப்பொருட்களாக விளங்கும் பட்டு நூல் உற்பத்தியில் நாம் தன்நிறைவு அடைய வேண்டும். நமது பட்டு நூல் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்வதற்கு முதல்வர் அவர்கள் பொறுபேற்றதில் இருந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். நடப்பாண்டு 2023 24 பட்ஜெட்டில் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு தொழில் முனைவோர்களுக்காக ரூ.67 கோடியே 52 லட்சம் மதிப்பிட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. இன்று ரூ.4 கோடி மதிப்பில் 1 கோடி வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதனக் கிடங்கு திறந்து வைக்கப் பட்டது.

இந்த விழாவில், மல்பெரி நடவு செய்த 398 விவசாயிகளுக்கு, ரூ.2 கோடியே 74 லட்சம் ஊக்கத் தொகையும், 777 விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு மனைக்காக ரூ.16 கோடி 44 லட்சம் மானியமும், விதைக்கூடு உற்பத்தி செய்யும் 11 விவசாயிகளுக்கு பட்டு புழு வளர்ப்பு மனைக்காக ரூ.28 லட்சத்து 87 ஆயிரம் மானியமும் வழங்கப்படுகிறது. ஒட்டு மொத்தமாக, இந்த விழாவில் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்துள்ள 788 பட்டு விவசாயிகளுக்கு ரூ.19 கோடியே 47 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை உயர்வு!**

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் அதிகரித்து வரும் வெண்பட்டு முட்டை தேவைக்காக கோவை மாவட்டம் சின்னவேடம் பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தலா 20 லட்சம் என 60 லட்சம் வெண்பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதன கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளது. இந்த வசதியை மேலும் கூடுதலாக்கி தர வேண்டும் என்ற பட்டு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, இன்று ஒசூர் பட்டு வளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில், ஒரு கோடி வெண்பட்டு முட்டைகளை பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு ரூ.4 கோடி மதிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மொத்த பட்டு நூல் தேவை 40 ஆயிரத்து 800 மெட்ரிக் டன். இந்தியாவில் 36 ஆயிரத்து 582 மெட்ரிக் டன் பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. பற்றாக்குறையான 3 ஆயிரத்து 874 மெட்ரிக் டன் பட்டு நூல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், ஏறத்தாழ 3 ஆயிரம் மெட்ரிக் டன் பட்டு நூல் தேவை உள்ளது. இதில், 2 ஆயிரத்து 589 மெட்ரிக் டன் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்கிறோம். மீதமுள்ள பட்டு நூல் தேவையினை நாமே பூர்த்தி செய்து கொள்ள முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் 3,500 ஏக்கருக்கு வழங்கிய ஊக்கத் தொகை கழக அரசு பொறுப்பேற்ற பின் 6,500 ஏக்கராக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இது வரை 9 ஆயிரத்து 133 விவசாயிகளுக்கு ரூ.15 கோடியே 75 லட்சம் மானியம் வழங்கப் பட்டு உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 300 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பட்டு புழு வளர்ப்பு மனை மானியம் தற்போது 1,500 பட்டு விவசாயிகளாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதற்காக வழங்கப்பட்டு வந்த மானியத்தை முதல்வர் அவர்கள் ரூ.87,500லிருந்து ரூ.1லட்சத்து 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கினார். இது வரை, 1,601 விவசாயிகளுக்கு ரூ.26 கோடியே 52 லட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. பட்டு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, முதல் முதலாக பவர் டில்லர் இயந்திரம் வழங்கப்பட்டு உள்ளது, 500 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 75 லட்சம் மதிப்பில் பவர் டில்லர் இயந்திரங்களும், 2,000 பட்டுப்புழு விவசாயிகளுக்கு ரூ.10 கோடியே 50 லட்சம் மதிப்பில் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும் வழங்கப்பட்டு உள்ளது.

**இளம் புழு வளர்ப்பு மையங்களுக்கு மானியம்!**

விதைக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மனைகள் அமைக்க மானியமும் பண்ணை தளவாடங்களும் நடப்பாண்டு முதல் வழங்கப்படுகிறது. கிராமப்புர மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. 14 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க ரூ.98 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. கழக அரசு போற்று இது வரை 13 ஆயிரத்து 237 பட்டு விவசாயிகளுக்கு ரூ.55 கோடியே 50 லட்சம் மானியமும், இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.6 கோடியே 10 லட்சம் மதிப்பில் ஒரு கோடி பட்டு முட்டைகள் பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு 2 தானியங்கி பட்டு நூற்பாலைகள் 8 பட்டு முறுக்காலைகள் நிறுவப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க ஆட்சி காலத்தில் 1,834 மெட்ரிக் டன்னாக இருந்த பட்டு நூல் உற்பத்தி, முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால், தற்போது, 2 ஆயித்து 589 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கழக அரசுபொறுப்பேற்ற பின், பட்டு விவசாயிகள் நூற்பாளர்கள், நெசவாளர்கள், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து திட்டங் களாக அறிவித்து நிறைவேற்றி வருகிறது. அரசு வழங்கும் நல திட்ட உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி பட்டு உற்பத்தியில் தமிழகத்தை தன்னிறைவு அடைய செய்ய வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் உணவு உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.எம்.சரயு, இயக்குநர் சந்திரசேகர சகாமுரி, ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் - மாவட்டச் செயலாளர் தளி ஒய்.பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.செல்லக்குமார், தளி சட்டமன்ற உறுப்பினர் இராமசந்திரன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தையா, மாமன்ற உறுப்பினர் வரலட்சுமி, இணை இயக்குநர் முருகன் மற்றும் துறை அலுவலர்கள், விவசாயிகள், தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள்!

# இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை!

## சென்னையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, நவ. 9-
நாடாளுமன்ற தேர்தலை அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக சென்னையில் இந்திய தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை நடத்த உள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்த உள்ளது.

இதேபோன்று, புதுச்சேரி, அந்தமான் மற்றும் லட்சத்தீவு யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

தமிழ்நாட்டின் சார்பில் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு பங்கேற்கிறார். வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது. மாநில காவல்துறை அதிகாரிகளும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.



தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (08.11.2023) சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



தி.மு.க. இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் – கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அளவிலான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனத்துக்கான நேர்காணல் நிறைவுற்ற நிலையில், புதிய நிர்வாகிகள் அறிவிப்பு குறித்து துணைச்செயலாளர்களுடன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்தாலோசித்தார். சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞரணியின் 2–ஆவது மாநில மாநாட்டுக்கான குழுக்கள் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநாட்டு பணிகளை முன்னெடுப்பது பற்றியும் ஆலோசித்தார். தமிழ்நாட்டின் கல்வி உரிமையை நிலைநாட்டிட கழகம் தொடங்கியுள்ள 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்தை இன்னும் வேகமாக முன்னெடுத்து banneet.in இணையதளம் மற்றும் அஞ்சல் அட்டைகளில் அதிகளவில் கையெழுத்துகளைப் பெற அறிவுறுத்தினார்.



கும்மிடிப்பூண்டி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளருமான ஏ.எம்.சி.எச். சேகரின் தாயார் மறைந்த கிருஷ்ணவேணி அம்மாள் அவர்களின் உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# வருமான வரித் துறையின் உச்சபட்ச அத்துமீறல்!

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

## அம்பு எய்தவர்கள் எங்கோ இருக்கிறார்கள்! அதிகாரிகள் மீது கோபமில்லை!

எல்லோரிடத்திலும் சென்று இந்த 4 தினங்களாக பல்வேறு வகையில் அவர்களை மன உளைச்சல் செய்யும் அளவிற்கு என்னைத் தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகள்.

இறுதியாக நான் தங்கியிருந்த இந்தக் கல்லூரியில் இருக்கும் தங்கும் விடுதியில் வந்து சல்லடைப் போட்டு அரிப்பது போல, ஆய்வு என்ற பெயரில் எல்லாவற்றையும் இவர்கள் செய்தார்கள்.

**அச்சுறுத்தல்!**

அதோடு மட்டுமல்ல, என்னைத் தொடர்புபடுத்தி விழுப்புரம், வந்தவாசி, கரூர், கோவை, அதேபோல் திருவண்ணாமலை - நம்முடைய ஊரில் இருக்கும் பல இடங்களில் சென்று தொடர்ந்து 5 தினங்களாக தொடர்புபடுத்தி பல்வேறு கேள்விகளை, அச்சுறுத்துவது இது போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதனால் அந்த ஐ.டி. ஆபிசர் மேல் இப்போது வரை எனக்கு கோபம் வரவில்லை. என்ன காரணம் என்று தெரியுமா? அம்புதான் இவர்கள். அம்பு விட்டவர்கள் எங்கோ இருக்கிறார்கள். ஏனென்றால் ஐ.டி. ரெய்டு பற்றி எனக்கும் தெரியும்.

**தேர்தல் வேலைகளை முடக்கினார்கள்!**

ஏனென்றால் ஏற்கனவே என்னுடைய வீட்டில் 2021 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் நான் வேட்பாளராக இருக்கிறபோது, என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்னுடைய அன்புத் தலைவர், அவர் வந்து தங்கியிருக்கும் நேரத்தில் ரெய்டு செய்தார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ரெய்டு செய்தவர்கள் என்ன செய்தார்கள்? அப்போது 2 நாட்கள் என்னுடைய தேர்தல் வேலைகளை முடக்கினார்கள். மன உளைச்சலை தந்தார்கள். அதன் விளைவு என்ன? 5,000 ஓட்டில் வெற்றி பெற வேண்டிய வேலு, ஏறத்தாழ 1 லட்சம் ஓட்டில் திருவண்ணாமலை மக்கள் என்னை வெற்றி பெற வைத்தார்கள்.

அதைவிட இந்த முறை எல்லோருக்கும் மன உளைச்சலையும் உருவாக்கி, கல்லூரியில் பணியாற்றும் பல்வேறு நிலையில் இருப்பவர்கள் என்னுடைய இன்சூரன்ஸ் பார்க்கும் ஒரு கிளார்க், அக்கௌன்ட் பார்க்கும் ஒரு கிளார்க், வங்கிக்கு செல்லும் ஒரு கிளார்க், HRI என்று சொல்லப்படும் டாக்டரின் ஃபெசிலிடிசை பார்ப்பவர் - இப்படிப்பட்டவர்களை எல்லாம் அழைத்து திருவண்ணாமலையில் ரெய்டு செய்வதுதான் அவர்கள் வேலை.

அதன் மூலமாக நாங்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களை உருவாக்கினோம். கிட்டத்தட்ட நூறு கிலோமீட்டர் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் இன்றைக்கு பல பேர் பொறியாளராக, பல்வேறு தொழிற்புரட்சியை இந்தப் பக்கத்தில் நடந்திருக்கிறது என்று சொன்னால், மனசாட்சி உள்ள அத்தனை பேருக்கும் தெரியும்... நான் இந்தக் கல்லூரியை மட்டும் இந்த வளாகத்தில் ஆரம்பிக்கவில்லை என்று சொன்னால், எத்தனை பேர் சென்னைக்குச் சென்று நம்முடைய கிராமத்துப் பிள்ளைகள் படித்திருக்க முடியும்.

**6 முறை மக்கள் பிரதிநிதி!**

ஆனால் அப்படிப்பட்ட ஒரு பணியில் நான் ஈடுபட்டிருந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும். இந்த நிலையில்தான் நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்து, ஒரு முறைக்கு இருமுறை அல்ல - தொடர்ந்து 6 முறை மக்களுடைய பிரதிநிதியாக சட்டமன்ற உறுப்பினராக நான் வெற்றி பெற்றதோடு மட்டுமல்ல, மக்களுக்கு நான் தொண்டு செய்திருக்கிறேன்.

இந்த பத்திரிகை நண்பர்கள் மூலமாக என்னால் வெளிப்படையாக நான் மிகவும் அடக்கத்தோடு சொல்ல விரும்புகிறேன். யாராவது இந்த மாவட்டத்தில் எதிர்க்கட்சிக்காரர்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் என்னுடைய இயக்கத்தை சார்ந்தவர்கள் வேலு ஏதேனும் கையூட்டு பெற்றிருக்கிறான் என்று யாரேனும் ஒருவர் சொன்னால்கூட அதற்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி நான் பொது வாழ்க்கையில் ஒழுக்கத்தையும் நான் கடைப்பிடித்துக் கொண்டிருப்பவன். அப்படிப்பட்ட நிலையில்தான் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 2006இல் உணவுத்துறை அமைச்சராக என்னை ஆக்கினார். அப்பொழுது நான் நிர்வாகத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன். என்னுடைய குடும்பம்தான் அந்த அறக்கட்டளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த அறக்கட்டளைக்கு யார் சேர்மன் என்றால், ... வெளியே அவரை இதுவரை பார்த்திருக்க மாட்டீர்கள். என்னுடைய முதல் மகன் குமரன். இவர் தான் அந்த அறக்கட்டளையின் தலைவராக இருந்து பணியாற்றுகிறார் என்பது லோகலில் இருக்கும் பத்திரிகையாளர்கள் உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

**அறக்கட்டளையை விட்டு வெளியே வந்துவிட்டேன்!**

நான் அறக்கட்டளையை விட்டு வெளியே வந்துவிட்டேன். எனக்கும் அந்த நிர்வாகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆனால் என்னை பொறுத்த அளவிற்கு இன்றைக்கு எனக்கு என்று இருக்கும் சொத்து 48 ஏக்கர் 33 சென்ட் தான். என் மீது நேரடியாக நிலம் இருக்கிறது. ... நகரில் வீடு கட்டும் சங்கத்தின் மூலமாக எனக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடம். அதை மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று சொன்னபோது, 33 ஆண்டுகளுக்கு அதை நான் லீசுக்கு கொடுத்திருக்கிறேன். ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்று இருக்கிறது. பணத்தை வாங்கிவிட்டு லீசுக்கு கொடுத்திருக்கிறேன். சென்னையில் எனக்கு ஒரே ஒரு வீடு இருக்கிறது. இதுதான் என்னுடைய சொத்து.

இதுதான் நான் ஏற்கனவே தேர்தலில் நிற்கிறபோதும் சரி, வேட்புமனு தாக்கல் செய்யும்போதும் இதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு என்னுடைய சொத்து இதுதான்.

இன்றைக்கு என் மீது நம்பிக்கை வைத்து 'இந்த துறையில் இவர் மிகச் சிறப்பாக நடத்துவார்' என்று என்னுடைய முதலமைச்சர் என் அன்பிற்குரிய அண்ணன் அவர்கள் இந்த துறையை என்னிடத்தில் ஒப்படைத்த பின்புகூட நான் எங்கேயும் ஒரே ஒரு சென்ட் அளவு கூட நான் சொத்து சேர்த்துக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட நிலையில்தான் நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தொடர்ந்து நான் இன்கம் டேக்ஸ் அஸ்செஸ்சி தான். வருடா வருடம் நான் கணக்கு வழக்குகளை முறையாக நான் இன்கம் கணக்கு செலுத்துகிறேன். அதற்குரிய டேக்ஸ் கட்டுகிறேன்.

**உச்சநீதிமன்றம் பாராட்டு!**

நான் எப்போதும் இன்கம் டேக்ஸ் ஏமாற்றுபவன் அல்ல. எனக்கு இருக்கும் சொத்தையும் நான் சொல்லி விட்டேன். நான் கட்டும் டேக்ஸையும் நான் சொல்லிவிட்டேன்.

அதோடு மட்டுமல்ல, இன்னொன்றும் உங்களுக்குத் தெரியும். 2006-2011-ல் நான் உணவுத்துறை அமைச்சராக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்டேன் என்று இன்றைக்கு இருக்கும் முதலமைச்சரும் சரி தலைவர் கலைஞர் அவர்களும் பாராட்டியதோடு மட்டுமல்ல, உச்சநீதிமன்றமே இந்தத் துறையைப் பாராட்டி, அப்போது டைம்ஸ் ஆப் இந்தியாவிலும் இந்து பத்திரிக்கையிலும் பெரிய ஆர்டிக்கலே வந்தது.

தமிழ்நாட்டின் உணவுத் துறையை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தீபக் பண்டாரியும், வர்மா அவர்களும் பாராட்டி அவைகள் எல்லாம் வெளியே வந்தது.

அப்படி நான் சிறப்பாக அந்தத் துறையை எடுத்துப் பணியாற்றினேன். அதற்குப் பின்னால் 2011ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 2011ல் என் மீது வழக்கு கிடையாது. 2012ல் என் மீது வழக்கு கிடையாது. 2013ல் காவல்துறை மானியத்தில் அன்றைக்கு அம்மையார் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது நான் கடுமையாக அந்தத் துறையை விமர்சனம் செய்தேன் என்ற ஒரே காரணத்திற்காக, 2 ஆண்டு காலம் கழித்து 2013ல் என் மீது 11 லட்சம் ரூபாய் சொத்து சேர்த்துவிட்டேன் என்று என் மீது ஒரு வழக்கு போடப்பட்டது.

அந்த வழக்கை இதே திருவண்ணாமலை ... கோர்ட்டில் கேஸ் 3 ஆண்டு காலம் வழக்கு நடைபெற்றது. அன்றைக்கு அந்த நீதிபதி அம்மையார் தீர்ப்பு வழங்கினார். என்ன தீர்ப்பு வழங்கினார் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். இவர் மீது அரசியல் உள்நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு இந்த வழக்கு என்று தள்ளுபடி செய்தார்.

அதற்குப் பின்னாலும் அம்மையார் விடவில்லை. உயர்நீதிமன்றத்தில் என் வழக்கை அப்பீல் செய்தார்கள். உயர்நீதிமன்றத்தில் 2 ஆண்டு காலம் அந்த வழக்கு அங்கு நடைபெற்றது. கீழ் கோர்ட்டில் வழங்கிய தீர்ப்புதான் உண்மையான தீர்ப்பு என்று அது உறுதி செய்தது. அதற்குப் பின்னாலும் அந்த அம்மையார் விடவில்லை.

இறந்துவிட்ட அம்மையாரை நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. நடைபெற்ற சம்பவத்தைத்தான் நான் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். வழக்கு நடைபெற்றது. அந்த சுப்ரீம் கோர்ட்டிலும் நான் நிரபராதி. இந்த வழக்கு அரசியல் உள்நோக்கத்தோடு போடப்பட்ட வழக்கு என்று உச்ச நீதிமன்றமே அதை தள்ளுபடி செய்தது என்பது உள்ளூரில் இருக்கும் பத்திரிக்கையாளர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அப்போது நீங்களே பத்திரிகையில் அந்த செய்திகள் போட்ட வரலாறு எல்லாம் உங்களுக்கு தெரிந்த ஒன்று.

## பொது வாழ்க்கையில் அப்பழுக்கற்றவனாகத் திகழ்பவன் நான்! கற்பனைக்கு எட்டாத தவறான செய்திகளைப் பரப்புகிறார்கள்!

**கட்சித் தொண்டர்கள் என்னைச் சந்திப்பது தவறா?**

நான் கேட்கிறேன், நான் ஒரு அரசியல்வாதி. எனக்கு ஒரு அமைச்சர் பொறுப்பைத் தந்திருக்கிறார் முதலமைச்சர். அமைச்சர் என்ற முறையில் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களது வேண்டுகோளை என்னிடத்தில்தான் வைக்க முடியும். மனு என்னிடத்தில்தான் கொடுக்க முடியும். அமைச்சர் என்கிற முறையில் சரி.

அரசியல்வாதி என்கிற முறையில் நான் சார்ந்திருக்கும் எனது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொண்டர்கள் என்னைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை சொல்லத்தான் செய்வார்கள். அவர்கள் என்னிடத்தில் வருவது தவறா? அப்படி வந்தவர்கள் எல்லாம் மையப்படுத்தி, அவர்களை தொடர்புபடுத்திக் கொண்டு ஐ.டி. ரெய்டு செல்வது என்பது எந்த விதத்தில் நியாயம்?

அது என்ன? தமிழ்நாட்டில் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த தொழிலதிபர்கள் யாருமே இல்லையா? அவர்கள் வீட்டிற்கு எல்லாம் தினமும் ஐ.டி. ரெய்டு சென்று கொண்டுதான் இருக்கிறீர்களா... எனவே ஐ.டி. ரெய்டு எங்கே செல்கிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்ற அடிப்படையில் ரெய்டு செய்கிறார்கள்.

நான் ஒன்று சொல்கிறேன்... இந்த ரெய்டுக்கு எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகமோ, அதன் தொண்டர்களோ, என் தலைவனோ, நாங்களோ - இதற்கெல்லாம் பயப்படுபவர்கள் அல்ல.

எங்களைப் பொறுத்த அளவிற்கு. சட்டப்படி நாங்கள் எப்போதும் நடந்து கொள்கிறோம். ரெய்டு எல்லாம் காட்டி எங்களுடைய தொண்டை, உழைப்பை நீங்கள் நிறுத்திவிட முடியாது.

நான் ஏற்கனவே சொன்னதுபோல, ஏற்கனவே ரெய்டு விட்டீர்கள். 2 நாட்கள் என்னுடைய பணிகள் அன்றைக்கு முடங்கின. இப்போது 5 நாட்கள் என்னை வைத்திருக்கிறீர்கள். என்னுடைய கழகப் பணிகள், அரசுப் பணிகள் 5 தினங்களாக நடைபெறவில்லை. அதைத்தான் உங்களால் முடக்க முடிந்தது. நான் இன்னும் வேகமாக அரசாங்கத்திற்காகவும், கட்சிக்காகவும் உழைக்கத் தயாராக இருக்கிறேன்.

**தம்பி உதயநிதி சொன்னது உண்மையானது!**

அதனால்தான் தம்பி இளவல் உதயநிதியே சொன்னார், இன்று ஐ.டி. என்பது என்பது பாரதீய ஜனதா கட்சியின் ஒரு அணியாக ஆகிவிட்டது. எவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாணவர் அணி, இளைஞரணி, விவசாய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி என்று இப்படி அணி இருப்பதைப் போல, பாரதீய ஜனதா கட்சிக்கு ஐ.டி. ஒரு அணியாக மாறிவிட்டது என்று நம்முடைய இளவல் தம்பி உதயநிதி ஸ்டாலின் 2 தினங்களுக்கு முன்னால் சொன்னார். அதுதானே உண்மையான நிலைமை.

எனவே எதற்கு நான் இதை சொல்கிறேன் என்று சொன்னால், இதன் மூலம் கழக முன்னணியினரை அச்சுறுத்துவது, அமைச்சர்களை அச்சுறுத்துவது - இதெல்லாம் எந்த காலத்திலும் அரசியலில் நடந்தது இல்லை.

ஐ.டி. என்பது புதிதாக வந்ததா... 10 ஆண்டு காலம் ஏற்கனவே மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, இன்னும் சொல்லப்போனால் அவர் நிதித்துறை அமைச்சராக இருந்தவர். உலகமே அவரை பாராட்டியது. அவர் காலத்தில் இப்படித்தான் எங்கு பார்த்தாலும் அந்த ஐ.டி. ரெய்டு நடைபெற்றுக் கொண்டிருந்ததா?

நான் இன்னும் வெளிப்படையாக சொல்கிறேன். மிகவும் உயர்ந்த மனிதர் வாஜ்பாய் என்பவர். அவர் பிரதமராக இருந்தவர். தமிழ்நாட்டில் எத்தனை இடத்தில் இதுபோன்று எதிர்கட்சிக்காரர்கள் தங்கள் கருத்துக்களை வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு, அரசியல் என்கிற பெயரில் எத்தனை வீட்டில் எத்தனை ரெய்டு நடந்திருக்கிறது.

'ரெய்டு'க்கு நாடாளுமன்றத் தேர்தலே காரணம்!

எனவே இப்பொழுது தொடர்ந்து, நாடாளுமன்ற தேர்தல் வருகிறது என்ற ஒரே காரணத்தை மையப்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களை, நிர்வாகிகளை, மாவட்டச் செயலாளர்களை, அமைச்சர் பெருமக்களை அச்சுறுத்துவது என்பது எந்த விதத்தில் நியாயம்?

ஒன்றை மட்டும் சொல்கிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மிசாவை பார்த்தவர். அவரால் அரவணைக்கப்பட்டிருக்கும் எங்களுக்கு ஒரே ஒரு இலக்கு என்னவென்று சொன்னால், நடைபெறுகிற நாடாளுமன்ற தேர்தல் தான் எங்களுடைய இலக்கு. அந்த இலக்கில் அவருடைய ஆணையை ஏற்று, 40க்கும் 40 நாடாளுமன்றத்தைப் பிடிப்பதுதான் எங்களுடைய நோக்கமாக இருக்குமே ஒழிய, அதில் யார் என்ன தலையிட்டாலும் சரி, எதை செய்தாலும் சரி எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில்தான் எங்களுடைய கவனங்கள் இருக்குமே தவிர, வேறு ஒன்றும் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.

எனவே அந்த அடிப்படையில் இந்த ரெய்டு என்பது எங்களை முடக்குவதற்காக வந்திருப்பதாக நினைக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். எனக்கும் அந்த அறக்கட்டளைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் அதில் உறுப்பினராக இல்லை அறங்காவலராக இல்லை அதன் சேர்மனாக இல்லை. என்னை சேர்மன்... சேர்மன் என்று சொல்வதற்கு ஒரே காரணம், அந்த அறக்கட்டளையை நான் முதன்முதலாக ஆரம்பித்த காரணத்தினால், ஆங்கிலத்தில் சொன்னால் ஃபவுண்டர் சேர்மன் என்று சொல்வார்கள், அந்த அடிப்படையில்தான் எனக்கு ஒரு மரியாதை இருக்கிறது தவிர, அதனால் அதற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதுதான் என்னுடைய அழுத்தமான கருத்து. அதைத் தான் உங்களுக்கு பதிவு செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதைப் பதிவு செய்து விட்டேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.

---

### திண்டுக்கல் மாவட்டத்தில் மின் கசிவு ஏற்பட்டு விபத்து!

# உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, நவ. 9-*

*திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேரிபட்டி கிராமம், மம்மானியூரில் கடந்த 05.11.2023 அன்று மாலை சுமார் 06:30 மணியளவில், செல்வன்.சு. குமார் (வயது:6) என்ற சிறுவன் அவருடைய வீட்டில் தகரத்தினால் செய்யப்பட்டிருந்த கதவைத் திறக்க முயன்ற போது மின்கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டது.*

*அப்போது, விபத்திலிருந்து அச்சிறுவனைக் காப்பாற்ற முற்பட்ட சிறுவனின் அக்கா செல்வி. சு.அழகுமீனா, த/பெ. சுந்தரம் வயது 16, (பெண்) அவருக்கும் மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்து விட்டனர்.*

*இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்ப சூழ்நிலையினை கருத்திற் கொண்டு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக

# பணியாளர்களுக்கு 20 சதவிகித தீபாவளி போனஸ்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ. 9-**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்களுக்கு 20 சதவிகித தீபாவளி போனஸ் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் "C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களுக்கு 2022-2023 ஆண்டுக்கான போனஸ் (Bonus) 8.33% மற்றும் கருணைத் தொகை (Ex-gratia) 11.67% ஆக 20% 2023-224-இல் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

போனஸ் சட்டத்தின் கீழ் வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 20 சதவீதம் (போனஸ் மற்றும் கருணைத் தொகை) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.3000/- கருணைத் தொகையாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மண்டலங்கள், நவீன அரிசி ஆலைகள், கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 49,023 பணியாளர்களுக்கு ரூ.29/- கோடி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க ஆணையிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனத்தில் மாவட்ட இளைஞரணி சார்பில் 'நீட் விலக்கு நம் இலக்கு' டிஜிட்டல் கையெழுத்து இயக்க முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் நீட் விலக்கு குறித்து தபால் கையெழுத்து பெறுவதற்காக பொதுமக்களிடம் தபாலை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகரச் செயலாளர் கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.டி .பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், நேற்று முன்தினம் (07.11.2023) மக்கள் நீதி மய்யத்தின் தலைவர், நடிகர் கமல்ஹாசன் தன்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு உபகரணத்தை வழங்கினார். அதனை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.ரமா சந்திரமோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### திண்டிவனத்தில்

# 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார்!

திண்டிவனம், நவ. 9 -

திண்டிவனத்தில் நீட் விலக்கு நம் இலக்கு டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து கூட்டாட்சி தத்துவத்திற்கு முரணாக இருப்பவர்கள் ஆளுநர்கள்.

இப்பேர்ப்பட்ட ஆளுநரை தன்னுடைய பி.ஜே.பி. ஏஜென்டுகளாக அனுமதிக்கப்பட்டுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் செயலை ஒட்டுமொத்த இந்தியாவே கண்டித்து உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் குற்றம் சாட்டினார்.

ஏழை எளிய அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைக்கும் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் மசோதாவிற்கு விரைந்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவருக்கு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் பெற்று கடிதம் அனுப்புவதற்காக

கழகஇளைஞர் அணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் திண்டிவனம் நகரத்தில் நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் டிஜிட்டல் கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் நகரச் செயலாளர் கண்ணன் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.டி.பாபு ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுநீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட நீட் விலக்கு தீர்மானத்தை தமிழகத்தின் ஆளுநராக உள்ள ஆர்.என். ரவி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தூக்கி எறிந்து விட்டு நீட் விலக்கு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்காமல் காலதாமதப் படுத்துகிறார் என்றால் அவர் நாட்டு மக்களுக்கு அநீதி மட்டுமல்ல இழுக்கு, அவமானம் ஏற்படுத்தி உள்ளார்.

மேலும் ஒட்டுமொத்த தமிழகத்தில் உள்ள மக்களால் தேர்வு செய்தஒரு அரசாங்கத்தின் தீர்மானத்தை அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதற்காக கங்கணம் கட்டிக் கொண்டு உள்ள ஒரு பி.ஜே.பி. ஆட்சியின் ஏஜெண்டாக இங்கே ஆளுநர் செயல்பட்டு வருகிறார் என்று குற்றம் சாட்டிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் தற்போது ஆளுநர் மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையை அவர் உருவாக்கியுள்ளார். இது ஆளுநர் பொறுப்பிற்கு இழுக்கு, அவமானம்,

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை சரியான முறையில் ஆளுநர் மதிக்கவில்லை அந்த வகையில் தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் வழக்கு தொடர்கின்ற நிலை உருவாகியுள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தத்துவத்திற்கு அடித்தளம் இட்டார்

மாநிலத்தில் இருக்கின்ற உரிமைகளைகட்டிக்காக்க வேண்டும், மாநில உரிமைகளை மத்தியில் உள்ள ஆட்சியாளர்கள் பறிக்கக் கூடாது, கை வைக்கக் கூடாது, என்பதற்காகத் தான் கூட்டாட்சி தத்துவம் அந்த கூட்டாட்சி தத்துவத்திற்குமுரணாக இருப்பவர் தான் ஆளுநர் இப்பேர்ப்பட்ட ஆளுநர்களை தமிழ்நாடு முழுவதும் தன்னுடைய பி.ஜே.பி. ஏஜென்டுகளாக அனுமதிக்கப்பட்டுள்ளஇந்திய பிரதமர் நரேந்திர மோடியின் செயலை ஒட்டுமொத்த இந்தியாவே கண்டித்து உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் சாடினார்.

தொடர்ந்து திண்டிவனம் நகரப் பகுதிகளில் நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கப் பணிக்காக இருசக்கர வாகனத்தில்சென்ற பொதுமக்களிடத்திலும், கார் வேன்களில் சென்ற பொதுமக்களிடத்திலும், வீதிகளில் சென்ற பொது மக்களிடத்திலும், அமைச்சர் செஞ்சி மஸ்தான் நடந்து சென்று நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து பெறுவதற்கு தபால்களை வழங்கினார். அப்போது நீட் விலக்கு நம் இலக்கிற்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகரமன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், நகர துணை செயலாளர் கௌதமன், நகர மன்ற உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் - நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் டி.அண்ணாதுரை தாயார்

# குள்ளம்மாள் தங்கவேல் மூன்றாம் ஆண்டு நினைவு நாள்!

## கழகத்தினர் பங்கேற்பு!

கடலூர், நவ. 9 -

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் ஒன்றிய கழக துணைச் செயலாளர், பூலாம்பாடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் டி.அண்ணாதுரை, கோயம்பேடு மார்க்கெட் பழக்கடை டி. மனோகரன் மற்றும் முரசொலி விநியோக மேலாளர் டி.கண்ணன் ஆகியோரின் தாயார் குள்ளம்மாள் தங்கவேல் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2023 வெள்ளிக்கிழமை) அனுசரிக்கப்படுகிறது.

கடந்த 24.12.2020 ம் ஆண்டு நடைபெற்ற அம்மையாரின் படத்திறப்பு நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர்-சிறப்பு செயலாக்கம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்



கள் கலந்து கொண்டு அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மற்றும் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் மற்றும் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னணியினர், தொ.மு.ச. நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிலையில் அம்மையாரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நாளை (10.11.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில், கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றியம், வேப்பூர் அருகில் உள்ள பூலாம்பாடி கிராமம், அவரது இல்லத்தில் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் உறவினர்கள் - கழகத்தினர் கலந்து கொள்கிறார்கள்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (07.11.2023), சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒருங்கிணைந்து புதுப்பித்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திரைப்படத் துறையினர் நல வாரிய புதிய உறுப்பினர்கள் அறிமுகக் கூட்டம்!

## தமிழ்வளர்ச்சி - செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.9-

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், திரைப்படத்துறையினர் நல வாரிய புதிய உறுப்பினர்களின் அறிமுகக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (7.11.2023) காலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் திரைப்படத்துறையினரின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை தீட்டி அவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தினார்கள். திரைப்படத்துறையினர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு திரைப்படத்துறையினர் மற்றும் சின்னத்திரை கலைஞர்கள் மென்மேலும் வாழ்வாதாரத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இந்நாள் வரை திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரை, அவை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் வகையில் 2,848 பயனாளிகளுக்கு ரூ.95 இலட்சத்து 59 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2022ஆம் ஆண்டுக்கு நலத்திட்ட உதவி வேண்டி வரப்பெற்ற விண்ணப்பங்களின்படி 122 நபர்களுக்கு ரூ.7,75,500/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்கள்.

மேலும், திரைப்படத் துறைக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் இவ்வரசு, திரைப்படத்துறையினர் நலவாரிய நிதி ஆதாரத்தினை பெருக்குவதற்கு படப்பிடிப்பு கட்டணத் தொகையிலிருந்து 50 சதவீத தொகை நலவாரியத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறை மற்றும் சின்னத் திரையை சார்ந்து வாழும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயரவும், மகிழ்ச்சியுடன் வாழவும் தொடர்ந்து பாடுபடும் எனவும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்கள்.

திரைப்படத்துறையினர் நலவாரிய உறுப்பினர்களான திரைப்பட தயாரிப்பாளர் முரளிராமசாமி, திரைப்பட நடிகர் எம்.எஸ். பாஸ்கர், திரைப்பட நடிகர் பூச்சி எஸ்.முருகன், திரைப்பட நடிகர் போஸ்வெங்கட், திரைப்பட இயக்குநர் மங்கை அரிராஜன், திரைப்பட நடிகர் பிரேம்குமார், திரைப்பட நடிகர் தாடிபாலாஜி, திரைப்பட பின்னணி குரல் கலைஞர் ஜெ.மதியழகன், திரைப்பட தயாரிப்பு நிருவாகி வி.பாக்கியராஜ், திரைப்பட ஒலிப்பதிவாளர் பரிமளவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கூட்டத்தில் அலுவல்சார் உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர்/ உறுப்பினர் செயலர் த.மோகன், கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) க.இளந்திரையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டினையொட்டி நவ.18 அன்று

# 100 இடங்களில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்ட முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.9 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (07.11.2023), சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒருங்கிணைத்து, புதுப்பித்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி திட்டம், டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். இந்த மகப்பேறு நிதியுதவி திட்டம் படிப்படியாக இன்று இந்தியா முழுமைக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவும் திட்டமாக மாறியுள்ளது.

2006ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் ரூ.6000/ வழங்கப்பட்டு வந்தது. அதன்பிறகு 2011-2012 ரூ.12,000/ மற்றும் தற்பொழுது ரூ.18,000/ ஆக உயர்த்தி முதல் இரு கர்ப்பத்திற்கு ஐந்து தவணைகளாக வழங்கப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு தனது பங்களிப்பாக ரூ.3000 வழங்கியது. இதோடு மாநில அரசின் பங்களிப்பு ரூ.15000த்தோடு சேர்த்து ரூ.18,000 வழங்கப்பட்டு வருகிறது. இதில் 14,000 ரூபாய் ரொக்கமாகவும், ரூ.4000 மதிப்பிலான 2 ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

2018க்கு பிறகு 5 தவணைகளாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பம் தரித்த 3வது மாதம் ரூ.2000மும், 4வது மாதம் ரூ.2000மும், குழந்தை பிறந்தவுடன் ரூ.4000மும், குழந்தை பிறந்து 3 மாதம் கழித்து ரூ.4000மும், 9 மாதம் கழித்து ரூ.2000 என்று ரூ.14,000த்தோடு ரூ.4000 மதிப்பிலான 2 பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் இணைந்து செயல்படுத்திய திட்டம் என்பதால், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டம் 2.0 என்ற இரண்டு திட்டங்களும் ஒருங்கிணையும் போது, பயனாளிகளின் பட்டியல் தயாரிப்பதில் மாறுபட்ட நிலை உருவானது. இதனால் 2 ஆண்டுகளாக முதல் தவணை தொகை பயனாளிகளுக்கு சென்று சேருவதில் சிறிய தாமதம் ஏற்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்றிய அரசிடம் தொடர்ந்து இதுகுறித்து பேசப்பட்டு வந்தது. தமிழ்நாடு அரசின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத்துறையும், ஒன்றிய அரசின் சார்பில் சமூக நலத்துறையும் இந்த திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

இந்த இரு துறைகளின் வளைதளத்தில் உள்ள குறைகளை கலைவதற்கு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெற்று வந்தது. கடந்த வாரம் இதற்கு தீர்வு ஏற்பட்டதையடுத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதியதாக சீரமைக்கப்பட்டு, 5 தவணைகளாக வழங்கப்பட்டு வந்த தொகை இனிமேல் 3 தவணைகளாக வழங்கப்படவுள்ளது. கர்பம் தரித்த 4வது மாதம் ரூ.4000மும், குழந்தை பிறந்தவுடன் ரூ.4000மும், குழந்தை பிறந்து 4 மாதங்கள் கழித்து ரூ.6000மும் என்று ஆக மொத்தம் ரூ.14,000 ரொக்கமாகவும், முதல் மற்றும் இரண்டாம் தவணைகளில் ஊட்டச்சத்து பெட்டகமும் இணைத்து தரப்படவுள்ளது.

இதற்கு முன்பு குழந்தை பிறந்து 9 மாதங்கள் கழித்து கடைசி தவணை வழங்கப்பட்டு வந்தது, தற்போது குழந்தை பிறந்து 4வது மாதமே கடைசி தவணை வழங்கப்படவுள்ளது. மேலும், இதற்கு முன்பு ஒன்றிய அரசு ரூ.3000 வழங்கியவுடன் தான் மாநில அரசு தனது பங்களிப்பை வழங்கப்படும் என்ற நிலை மாறி ஒன்றிய அரசு காலதாமதமாக தனது பங்களிப்பு தொகையை வழங்கினாலும், மாநில அரசு தனது பங்கு தொகை வழங்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இனிமேல் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கும் தொகையில் காலதாமதம் இல்லாத வகையில் இந்த திட்டம் புதுவடிவம் பெற்றுள்ளது. ஒன்றிய அரசு முதல் பெண்குழந்தைக்கு ரூ.3000மும், இரண்டாவது பெண் குழந்தைக்கு ரூ.6000மும் தருகிறார்கள்.

இன்று டாக்டர்.முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் 2.0 ஒன்றினைத்து புதுப்பித்து துவக்கி வைக்கப்பட்டு 1,06,766 பயனாளிகளுக்கு ரூ.44.05 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் தொடங்கிய 2006 முதல் இதுவரை 1,16,95,973 பயனாளிகளுக்கு ரூ.10,529.57 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் யாருக்கேனும் விடுபட்டிக்கும் நிலை இருக்குமானால் உடனடியாக அந்தந்த மாவட்ட சுகாதார துணை இயக்குநர் அவர்களிடம் முறையிட்டு சரி செய்துக் கொள்ளலாம், அல்லது 104 என்கின்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு குறைகளை தெரிவிக்கலாம்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம்!

முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான நிலையில் பயன்பாட்டில் இருக்கின்றது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 8,12,175 புதிய பயனாளர்கள் சேர்ந்திருக்கின்றனர், என்றாலும் புதிது புதியதாக குடும்பங்கள் உருவாகின்றது, எனவே அவர்களுக்கும் இத்திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 100 இடங்களில் புதிய காப்பீட்டு திட்டம் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி வருகின்ற 18.11.2023 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தமிழ்நாட்டில் 100 இடங்களை தேர்ந்தெடுத்து, அந்த இடங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட சிறப்பு முகாம்கள் ஒரே நாளில் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களில் காப்பீட்டு திட்டத்தில் அட்டைகள் பெறாதவர்கள் கலந்துகொண்டு காப்பீட்டு அட்டை பெற்று பயனடையுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம். மேலும் பலர் கடந்த 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டு திட்ட அட்டையினை வைத்திருக்கிறார்கள். அந்த அட்டை தற்போது செயல்பாட்டில் உள்ளதா என்று ஆராய்ந்து புதிய அட்டையினை பெற்றுக்கொள்ளலாம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல் பணியை நேற்று முன்தினம் (07.11.2023) கழக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்டோர் உடன் இருந்தனர். முதல் உரிமைச் சீட்டை திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆவடி நாசர் பெற்றுக்கொண்டார்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமம் கிறிஸ்துவின் பாசறை சபை அருகில் கடந்த 31.10.2023 அன்று இரவு இரண்டு இருசக்கர வாகனங்கள் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிய விபத்தில் புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த வசந்தன் ப்ரீஸ் (வயது 33) த/பெ. மிக்கேல் என்பவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் அதற்கான காசோலையினை நேற்று வழங்கினார். உடன் மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி ஆகியோர் உடன் உள்ளனர்.

### மூத்த பத்திரிகையாளர்

# ஆர்.கே.ராதாகிருஷ்ணனுக்கு முனைவர் பட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, நவ. 9 -

மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணன் முனைவர் பட்டம் பெற்றதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**முனைவர் ஆர்.கே.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்துகள்!**

**ஆண்டுகள் எத்தனையானாலும் அறிவு தேடலுக்கு எல்லை இல்லை எனப் பயணிக்கும் நீங்கள் தமிழ்நாட்டுக்குத் திரும்பியவுடன் சந்திப்போம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கோடநாடு வழக்கு: மாவட்ட நீதிபதியிடம்

# 3 பென் டிரைவ்களை சமர்ப்பித்த சி.பி.சி.ஐ.டி. போலீசார்!

உதகை, நவ. 9 -

கோடநாடு வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜம்சீர் அலி, தீபு ஆகியோரிடம் செல்போன்கள், சிம்கார்டுகள் கைப்பற்றப்பட்டன. ஊட்டி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரியை அடுத்த கோடநாடு எஸ்டேட்டில் முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்குச் சொந்தமான பங்களா உள்ளது.

இந்த பங்களாவில் கடந்த 2017ம் ஆண்டு கொலை, கொள்ளை சம்பவங்கள் அரங்கேறின. இந்த சம்பவத்தை சேலம் ஆத்தூரைச் சேர்ந்த கனகராஜ் தலைமையிலான கும்பல் அரங்கேற்றியது. இதில் கனகராஜ் சாலை விபத்தில் இறந்து விட்டார். இதையடுத்து போலீசார் இதில் தொடர்புடையதாக சயான், வாளையார் மனோஜ் உள்பட கேரளாவைச் சேர்ந்த 10 பேரை கைது செய்தனர். கோடநாடு கொலை, கொள்ளை தொடர்பான வழக்கு ஊட்டி செசன்ஸ் கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்ட பின், சி.பி.சி.ஐ.டி. ஏ.டி.எஸ்.பி. முருகவேல் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, 49 பேர் அடங்கிய குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த நிலையில், கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக ஊட்டி கோர்ட்டு நீதிபதியிடம் 3 பென் டிரைவ்களை சி.பி.சி.ஐ.டி. போலீசார் சமர்ப்பித்துள்ளனர்.

3 பென் டிரைவ்களும் விரைவில் கோவையில் உள்ள ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு தகவல்கள், பதிவு செய்து பெறப்பட உள்ளன. ஆய்வு முடிவுகள் மூலம் சிபிசிஐடி போலீசாருக்கு முக்கிய ஆதாரங்கள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கோடநாடு வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜம்சீர் அலி, தீபு ஆகியோரிடம் செல்போன்கள், சிம்கார்டுகள் கைப்பற்றப்பட்டன.

# தீபாவளி பண்டிகை: சென்னையில் இருந்து இன்று முதல் சிறப்பு பேருந்துகள்!

சென்னை, நவ. 9 –

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில் வெளியூரில் வசிப்பவர் தீபாவளி பண்டிகையை, சொந்த ஊரில் குடும்பத்துடன் கொண்டாடுவதற்கு ஏதுவாக தமிழக அரசு சிறப்பு பஸ்களை அறிவித்தது.

அதன்படி, தீபாவளி பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து இன்று (வியாழக்கிழமை) முதல் 11ந் தேதி வரை 3 நாட்கள் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. வழக்கமாக தினமும் இயக்கப்படும் 2,100 பஸ்களுடன் கூடுதலாக 1,365 பஸ்கள் வீதம் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 4,675 சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு தயாராக உள்ளன.

சிறப்பு பஸ்களில் முன்பதிவு செய்து பயணம் செய்ய மக்கள் தயாராக உள்ளனர். இதுவரையில் 1 லட்சம் பேருக்கு மேல் முன்பதிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. சிறப்பு பஸ்கள் மாதவரம் புதிய பஸ் நிலையம், கே.கே. நகர் மாநகர பஸ் நிலையம், தாம்பரம் அண்ணா பஸ் நிலைய நிறுத்தம், பூந்தமல்லி விரைவுச்சாலை பஸ் நிறுத்தம் மற்றும் கோயம்பேடு பஸ் நிலையங்களில் இருந்து இயக்கப்படுகின்றன.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், மாரண்டஅள்ளி பேரூரைச் சேர்ந்த எம்.ஆர்.கார்த்திகேயன் மற்றும் பொ.மல்லாபுரம் பேரூரைச் சேர்ந்த கு.புஷ்பராஜ், எம்.ரஹிமான்கான், ந.மோகன்குமார், த.ஆனந்த் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8-11-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தீபாவளியை விபத்தில்லா பண்டிகையாக கொண்டாடுங்கள்!

## பொதுமக்களுக்கு தமிழ்நாடு அரசு வேண்டுகோள் !

சென்னை, நவ. 9 -

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியைவெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும்காற்று மாசினால் சிறு குழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச் சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்குஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை தினத்தன்றும், கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தேசிய பசுமை படைகள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆகிய துறைகளின் செயலாளர்கள், காவல்துறை இயக்குநர், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச் சூழல் துறை இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**பாதுகாப்பான தீபாவளி கொண்டாடுவதற்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை**

1.பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்றுமாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமைபட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

2.மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்கவேண்டும்.

**தவிர்க்க வேண்டியவை**

1.அதிக ஒலி எழுப்பும்மற்றும் தொடர்ச்சியாக வெடிக்கக்கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.

2.மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3.குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைவருக்கும் இதயங்கனிந்த மாசற்ற தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு டால்பின்களைப் பாதுகாக்க

# டால்பின் திட்டம் செயல்படுத்துதல்!

சென்னை, நவ. 9 -

ஒன்றிய அரசின் வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டின் கீழ், தமிழ்நாடு அரசு டால்பின் திட்டத்தை செயல்படுத்த 06.11.2023 அன்று அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடல் வாழ் உயிரினங்களில் 9க்கும் மேற்பட்ட டால்பின் வகைகள் காணப்படுகின்றன. மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் இவற்றின் முக்கிய வாழ்விடங்கள் உள்ளன. கடந்த ஆண்டு மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் 7 டால்பின்கள் வெற்றிகரமாக மீட்கப்பட்டு கடலில் மீள விடப்பட்டன. மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் என்பது கடல் பாலூட்டிகளான கடல் பசு போன்றவை உட்பட வளமான கடல் பல்லுயிர் பெருக்கத்துடன் அதிக உற்பத்தித் திறன் கொண்ட பகுதியாகும்.

சுற்றுச்சூழலை சமநிலையில் வைத்திருப்பதில் டால்பின்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. டால்பின்கள் வேட்டையாடுதல், மீன்பிடி வலைகளில் சிக்குதல், மிதமிஞ்சிய மீன்பிடித்தல், காலநிலை மாற்றம், கப்பல் வேலைநிறுத்தங்கள், சுற்றுலா நடவடிக்கைகள், நச்சு மாசுபாடு, ஒலி மாசுபாடு, எண்ணெய் மற்றும் எரிவாயு வளர்ச்சி மற்றும் வாழ்விடச் சீரழிவு போன்ற பல்வேறு இயற்கை மற்றும் மனிதனால்தூண்டப்பட்ட அச்சுறுத்தல்களை உலகெங்கிலும் உள்ள டால்பின்கள் எதிர்கொள்கின்றன.

மீனவர்கள் மற்றும் கடல் சார்ந்த பிற மக்களுடன் இணைந்து நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டால்பின்கள் மற்றும் அவற்றின் நீர்வாழ் வாழ்விடங்களைப் பாதுகாப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் டால்பின் இனங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், அவற்றின் வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும் அதே நேரத்தில் உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த டால்பின் திட்டம் உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் அழிவு நிலையில் காணப்படும் உயிரினங்களை பாதுகாப்பதில் உள்ள சவால்களை கையாள பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேற்படி திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

சிறந்த ரோந்து வேட்டை தடுப்பு நடவடிக்கைகள் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்துடன் கண்காணிப்பு மற்றும் ரோந்து குழுக்களை வலுப்படுத்துதல்.

கால்நடை மருத்துவ சேவைகளை வலுப்படுத்துதல், ரோந்து மற்றும் பயிற்சி போன்றவற்றின் மூலம் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.

அலையாத்தி காடுகள், பவளப்பாறைகள், கடல் புல் போன்ற கடலோர சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுப்பதன் மூலம் டால்பின் வாழ்விடத்தை மேம்படுத்துதல்.

சுருக்குமடி வலைகளை அகற்றுதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டைக் குறைத்தல்.

உள்ளூர் மக்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ‘டால்பின் உதவித்தொகை’ தொடங்குதல் உட்பட “தேசிய டால்பின் தினத்தை” கொண்டாடுவதன் மூலம் விழிப்புணர்வை மேம்படுத்துதல்,.

ஊக்கத்தொகை மற்றும் விருதுகள் மூலம் உள்ளூர் சமூகத்தை ஊக்குவித்தல்.

டால்பின் உதவித் தொகை திட்டத்தை தொடங்குதல் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துதல் போன்றவை, சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் வழக்கமான மீன்பிடி நடைமுறைகளுக்கு மாற்றாக வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.

கலந்தாய்வுக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் போன்றவை மூலம் மேற்படி அழிந்து வரும் உயிரினங்களை சிறப்பாக கற்கவும் புரிந்து கொள்ளவும், ஏற்பாடு செய்தல்.

டால்பின் திட்டம் கடல் சூழலியல் மற்றும் கடல் சூழலின் ஒட்டு மொத்த ஆரோக்கியத்தை வலுப்படுத்தும். மேற்படி திட்டம் 8.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, நவ.9-

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2022-2023 ஆண்டுக்கான மிகை ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகை (Exgratia) 2023-2024இல் வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சென்ற ஆண்டைப் போலவே அவர்களுடைய சம்பளத்தில் 10 சதவீதம் போனஸ் (போனஸ் மற்றும் கருணைத் தொகை) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத, தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.3000/ம், தொடக்க சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ.2,400/ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள தலைமை கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் 44,270 பணியாளர்களுக்கு ரூ.28 கோடியே ஒரு இலட்சம் போனஸ் மற்றும் கருணைத் தொகைவழங்கப்படவுள்ளது.

இவ்வாறு கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.



வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் மின்சாரம் தாக்கி இருவர் பலியான குடும்பத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்து நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் சுப்பையன், அய்யலூர் பேரூர் கழகச் செயலாளர் கருப்பன் ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில், டாக்டர் அப்துல்கலாம் கலையரங்கத்தில் நடைபெற்ற பேரவை (2023–2024) தொடக்க விழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 31.10.2023 அன்று துவக்கி வைத்து, மாணவிகளுக்கு மீண்டும் மஞ்சப்பையுடன் மரக்கன்றுகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.நா.கவிதப்பிரியா, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் திருமதி.ஜெ.சுகந்தி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன்அரசு, வட்டாட்சியர் கவியரசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அன்னை சத்யா நகர், பூம்புகார் நகர், சூளை ஆகிய பகுதிகளில் மழையின் காரணமாக வெள்ளம் சூழ்ந்துள்ள இடங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி மக்களுக்கு உணவு வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி ஆணையாளர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், மண்டல தலைவர் ப.க.பழனிசாமி, பகுதி கழகச் செயலாளர்கள் பெரியசேமூர் வி.செல்வராஜ், வீரப்பன் சத்திரம் வி.சி.நடராஜன், மாமன்ற உறுப்பினர் எஸ்.முருகேசன், வீரமணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பள்ளி மாணவ – மாணவியருக்கான கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியை புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரை பாலு வரவேற்புரையிலும் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, ஆ.செந்தில், சு.சண்முகம் மற்றும் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்,

# பள்ளி மாணவ,மாணவிகளுக்கான ஒப்பித்தல் போட்டிகள்!

## வண்ணை.அரங்கநாதன்- குன்னம் சி.இராஜேந்திரன்-எம். பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.9-

பெரம்பலூர் மாவட்டத்தில்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி, பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த போட்டிக்கு கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ் தலைமை வகித்தார்.

துணை அமைப்பாளர் தர்ம.பூபதி வரவேற்புரையாற்றினார்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட தலைவர் சி. முத்தரசன் முன்னிலை வகித்தார்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் வண்ணை. அரங்கநாதன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினார்.

மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி,

எம்.ராஜ்குமார், எஸ். நல்லதம்பி, தி.மதியழகன், பொதுக்குழு உறுப்பினர் ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கே.சி.ஆர்.குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.மாவட்ட கலை இலக்கியப் பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துச்செல்வம் நன்றியுரையாற்றினார். "இதயத்தைக் தந்திடு அண்ணா'

புறநானூற்றுத்தாய் ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற போட்டிக்கு கவிஞர்.முத்தரசன், முனைவர். தம்புசாமி பேராசிரியர் நீலவேணி, முனைவர் சிவசாமி, பேராசிரியர் ஹேமமாலினி, கவிஞர்.தேசிங்குராஜன் ஆகியோர் நடுவர்களாக இருந்து போட்டிகளை நடத்தினார்கள்.

கவிதை ஒப்பித்தல் போட்டியில் மொத்தம் 73 பேர் கலந்து கொண்டனர்.

வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் மாணவி செ.பார்க்கவி முதல் பரிசாக ரூ.5000. அரும்பாவூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கும் மாணவன் க.ராகுல் இரண்டாம் பரிசாக ரூ.3000.

அந்தூர் செயிண்ட் பால்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கும் மாணவி ம. ஜெ.மதுமிதா மூன்றாம் பரிசாக ரூ.2000 பெற்றனர்.

கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் வசனங்கள் ஒப்பித்தல் போட்டியில்

ரஞ்சன்குடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி செ.திரன்யா முதல் பரிசாக ரூ.5000. லெப்பைக்குடிக்காடு அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் ச.ஆதிம்கனி இரண்டாம் பரிசாக ரூ.3000. செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி ஹ.காயத்ரி மூன்றாம் பரிசாக ரூ.2000 பெற்றனர்.

### தொழில் தொடங்குவோருக்கான

# ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள் பயிற்சி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.9-

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் மற்றும் தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கான ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள் குறித்த பயிற்சி பெறுவதற்காக இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது தமிழ்நாடு அரசு.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:-

இந்தியாவில் தற்போது உற்பத்தி பொருட்கள் / சேவைகளை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மூலமாக தொழில்கள் விரிவடைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து கொண்டே உள்ளன. எனவே ஏற்றுமதி பற்றியும் அதன் வழிமுறைகளை பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில், ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகளையும், சட்டதிட்டங்ககளையும் குறித்த பயிற்சி வரும் 21.11.2023 முதல் 23.11.2023 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்கள், வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவணியின் மாற்று விகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், ஏற்றுமதி இறக்குமதி விதிமுறைகள் மற்றும் ஆவணங்கள், போன்றவை பயிற்றுவிக்கப்படும். மேலும், இப்பயிற்சியில் ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்க உதவிகள் பற்றியும் அவைகளை பெறும் முறைகளை பற்றியும் ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

ஏற்றுமதி சார்ந்த தொழில் துவங்க விரும்பும் அல்லது தற்போது உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் 18 வயது நிரம்பிய 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைவரும் சேரலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்:

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. 044 22252081 / 22252082, 8668102600 / 86681 00181.

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### வேடச்சந்தூர் தொகுதியில்

# மின்சாரம் தாக்கி பலியான இருவர் குடும்பத்திற்கு நிதிஉதவி

## காந்திராஜன் எம்.எல்.ஏ. சொந்த செலவில் வழங்கினார்!

திண்டுக்கல், நவ. 9-

வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை ஒன்றியம் கொம்பேறிபட்டி மம்மானியூரைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சுந்தரம். தனது வீட்டில் வசித்த நிலையில் நவ.5ல் ஏற்பட்ட மின்கசிவால் சுந்தரத்தின் மூத்த மகள் அழகுமீனா, 2வது மகன் குமார் மின்சாரம் தாக்கி இறந்தனர்.

இந்த குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிக்க வேடசந்தூர் கழக சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் மம்மானியூர் சென்று ஆறுதல் தெரிவித்தார்.தனது சொந்த பணத்தில் ரூ.25 ஆயிரம் வழங்கினார்.

அப்போதுஅவர் கூறுகையில், "சுந்தரம் குடும்பத்திற்கு முதல்வர் நிவாரண நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இலவச வீட்டு மனையுடன் வீடு கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அவருடன் வடமதுரை கழக ஒன்றியச் செயலாளர் சுப்பையன், அய்யலூர் சேர்மன் கருப்பன் கொம்பேறிபட்டி ஊராட்சி மன்ற தலைவர் ராஜரத்தினம்,

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ந.வெள்ளைச்சாமி, சொக்கலிங்க, வேடசந்தூர் தாசில்தார் விஜயலட்சுமி, வடமதுரை மின்வாரிய உதவி பொறியாளர் காமாட்சி நாதன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

### விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

# வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.9-

வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது. இதற்கான விண்ணப்பங்களை தமிழ்நாடு அரசு வரவேற்றுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

வீர, தீரச் செயல்களுக்கான "அண்ணா பதக்கம்" ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் அவர்களால், குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது.

வீர, தீரச் செயல் புரிந்த தமிழகத்தைச் சேர்ந்த விண்ணப்ப தாரர்கள் மட்டுமே இப்பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். பொதுமக்களில் மூவருக்கும், அரசு ஊழியர்களில் (சீருடை பணியாளர்கள் உட்பட) மூவருக்கும் இப்பதக்கங்கள் வழங்கப்படும். பதக்கம் பெற வயது வரம்பு ஏதுமில்லை. இவ்விருது ரூ.1,00,000/ (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)க்கான காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை கொண்டதாகும். இப்பதக்கம் முதலமைச்சர் அவர்களால் 26.01.2024 குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

2024ஆம் ஆண்டிற்கான 'வீரதீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கம்' விருதுக்கு பரிந்துரைகள் கோரப்படுகின்றன. வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறப்படும். வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இணையதளத்தில் அதற்கென உள்ள படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கியதாகவும், விருதுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்களின் வீரதீர செயல்களைப் பற்றி எடுத்துரைக்கும் தகுதியுரை (அதிகபட்சம் 800 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்) தெளிவாகவும், தேவையான அனைத்து விவரங்களும் முறையாக நிரப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

வீரதீரச் செயல்களுக்கான அண்ணா விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 15 டிசம்பர், 2023 ஆகும். இணையதளத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர்கள், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அரியலூர் மாவட்டத்தில்

# 3,440 பயனாளிகளுக்கு ரூ.20.17 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர்,நவ,9-

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி அனிதா அரங்கத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 3,440 பயனாளிகளுக்கு ரூ.20.17 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

ஒருங்கிணைந்த மாவட்டத்தில் அரியலூர் இருந்த போது அரசின் திட்டங்கள் கடைகோடியில் இருந்த பொதுமக்களுக்கு சென்று சேராத நிலை இருந்ததை உணர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரியலூர் என்ற தனி மாவட்டத்தினை உருவாக்கியதுடன், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தையும் ஏற்படுத்தி அரசின் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு உடனடியாக சென்று சேரும் வாய்ப்பை ஏற்படுத்தினார். அவருடைய ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களால்தான் தமிழ்நாடு இன்று பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. அதனைப் பின்பற்றியே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக விளங்க செய்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற நாள் முதல் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள திட்டங்களை மற்ற மாநிலங்களிலும் அதனை பின்பற்றி செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என அறிவித்து அதனை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒரு கோடியே 6 இலட்சம் மகளிர் மாதந்தோறும் 1000 உரிமைத் தொகையாக பெறுகின்றனர். இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து விடுபட்டவர்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு உரிமைத் தொகையானது வழங்கப்படவுள்ளது.

இதே போன்று நம்முடைய பெண் குழந்தைகள் நல்ல கல்வியினை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு பள்ளிகளில் 6 முதல் 12 வகுப்பு பயின்று உயர்கல்வி பயிலும் பெண்களுக்கு மாதந்தோறும் 1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2000 பெண்கள் பயன்பெற்று கல்வி பயின்று வருகின்றனர். ஆண்களை போல பெண்களும் கல்வி பயில வேண்டும் என்று பெற்றோர் முன்வர அரசு உதவி புரிய வேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்தில் 14 துறைகளின் சார்பில் 3,440 பயனாளிகளுக்கு ரூ.20.17 கோடி மதிப்பில் இன்றைய தினம் கலைஞர் நூற்றாண்டு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் இலக்குவன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் தீபாசங்கரி, வருவாய் கோட்டாட்சியர்கள் ராமகிருஷ்ணன் (அரியலூர்), பரிமளம் (உடையார்பாளையம்), மாவட்ட வழங்கல் அலுவலர் ராமலிங்கம், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) இளங்கோவன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், கோ.அறிவழகன், மா.அன்பழகன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், நகர்மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி,

அரியலூர் தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அருண்ராஜா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் தங்கை.எழில்மாறன், முத்தமிழ்செல்வன், ஆனந்த்,ரமேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆசை.அன்பு, இராஜேந்திரன், குணா, மணிவண்ணன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள், பயனாளிகள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, வடிவீஸ்வரம் பகுதியில் நேற்று (08.11.2023), ரூபாய் 1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன், மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், மாநகராட்சி நல அலுவலர் டாக்டர். ராம்குமார், மாநகராட்சி அதிகாரிகள், துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, கிழக்கு மண்டல தலைவர் திருமதி. அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர் திருமதி. அனந்தலெட்சுமி உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மீன்வளத்துறை இணை இயக்குனர் அலுவலக வளாகத்தில் தூத்துக்குடி மீனவர் கூட்டுறவு நகைக்கடன் வழங்கும் வங்கி திறப்பு விழாவில் மீனவ பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, துணை மேயர் திருமதி.செ.ஜெனிட்டா, மண்டல தலைவர் வடக்கு நிர்மல், தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் வறிய நிலையில் உள்ள கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்வின் போது, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இரா.புகழேந்தி தலைமை! தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## திருப்புவனத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை!

சிவகங்கை. நவ. 9-

சிவகங்கை மாவட்ட திராவிட கழகத்தின் சார்பில் திருப்புவனம் சந்தை திடலில் ஒன்றிய அரசின் மனுதர்மா யோஜனா திட்ட எதிர்ப்பு பொதுக் கூட்டம் மாவட்ட தி.க.தலைவர் இரா.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் திருமதி தமிழரசிரவிக் குமார் எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன், திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இரா.ஜெயக்குமார், இரா.குணசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

திராவிடர் கழக நிர்வாகிகள் கே.எம்.சிகாமணி, சு.ராசங்கம், சாமி.திராவிடமணி, ம.கு.வைகறை, சி.செல்வமணி, ஜெ.தனபால், ச.ஆனந்தவேல், திருமதி மணிமேகலை சுப்பையா, அ.மகேந்திரராசன், எம்.முருகேசன், கோ.வ.அண்ணாரவி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தலைமைக் கழக பேச்சாளர்கள் தி.என்னாரெசு பிராட்லா அதிரடிஅன்பழகன் ஆகியோர் தொடக்க உரை ஆற்றினார்கள்.

முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.ஏ.கடம்பசாமி, திருமதி வசந்திசேங்கைமாறன், பேரூர்க் கழகச் செயலாளர் நாகூர்கனி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக பெரு.ராஜாராம் வரவேற்றுப் பேசினார். வெ.அக்னி நன்றி கூறினார்.

### திருவாரூரில் "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபயிற்சி!

### பூண்டி.கே.கலைவாணன் -தலையாமங்கலம் ஜி.பாலு பங்கேற்பு!

திருவாரூர்,நவ.9-

திருவாரூர் நகராட்சிக் குட்பட்ட பகுதியில் சுகாதாரத்துறையின்மூலம் நடத்தப்பட்ட "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபயிற்சியினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன்தொடங்கிவைத்தார். மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு , மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

சுகாதாரத்துறையின் மூலம் நடப்போம் நலம் பெறுவோம் சுகாதார நடைபயிற்சி மாநிலம் முழுவதும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனடிப்படையில் திருவாரூர் மாவட்டத்தில் நடைபயிற்சியானது திருவாரூர் நகராட்சி அலுவலகத்தில் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக நடைபயிற்சி மேற்கொள்ளப்பட்டு திருவாரூர் நகராட்சி அலுவலகத்திலேயே முடிவடைந்தது. இந்நடைபயிற்சியில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், தினமும் நடைபயிற்சி மேற்கொள்பவர்கள், மருத்துவ பணியாளர்கள் பங்கேற்றனர்.

உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி உடற்பயிற்சிகள் செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாகத்தினை 28 சதவீதமும், இதய நோய் தாக்கத்தினை 30 சதவீதமும், 31 சதவீதமும் இறப்பு ஏற்படுவதை குறைக்கிறது என அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும், நாள்பட்ட உடற்பிரச்சினைகள், மன அழுத்தத்தினை குறைக்கவும் ஆகவே நடப்போம் நலம் பெறுவோம் என்பதற்கிணங்க பொதுமக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தினை கருத்தில் கொண்டு 8 கி.மீ தூரம் ஆரோக்கியமான நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

10,000 அடிகள் நடக்கும் போது நம்முடைய மூளைக்கு நரம்புகள் சுறுசுறுப்பு அடையும். இரத்த ஓட்டத்தின் அளவு அதிகரிக்கும். இதனால் மன அழுத்தம் மற்றும் மன சோர்வு குறையும். நுரையிரலுக்கு செல்லும் ஆக்ஸிஜனின் அளவும் அடர்த்தியும் அதிகரிக்கும். சுவாசிப்பு எளிதாகும். இதயத்திற்கு ஆக்ஸிஜனும், இரத்த ஓட்டமும் சீராக செல்ல வழிவகுப்பதால் இதயம் ஆரோக்கியம் மேம்படும்.

15 நிமிடம் நடைபயிற்சி மேற்கொள்ளும்போது தசைகளுக்கு அதிகபடியான குளுக்கோஸ் தேவைப்படும். இதனால், இரத்தத்தில் உள்ள அதிகபடியான சர்க்கரையினை உறிஞ்சி தசைகளுக்கு ஆற்றலாக மாற்றி கொடுப்பதால் இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்து நீரிழிவு நோய் வராமல் தடுக்கவும், இரத்த சர்க்கரை அளவினை கட்டுக்குள் வைத்திருக்கவும் உதவும் மற்றும் 30 நிமிட நடைபயிற்சி செய்யும்போது இருதய நோய் வராமல் தடுக்கலாம். மன அழுத்தம் மற்றும் மனசோர்வு குறையும். 30 நிமிடம் முதல் 45 நிமிடம் நடைபயிற்சி மேற்கொள்ளும்போது கார்டிசோல் ஹார்மோன் உற்பத்தி குறைந்து மன அழுத்தம் வராமல் தடுக்கலாம். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மற்றும் கலோரிகளை குறைத்து உடல் எடையினை சீராக வைக்க உதவும். ஒரு மணி நேரம் நடந்தால் எலும்புகள் உறுதியாகி ஆஸ்டியோபொராசிஸ் போன்ற பிரச்சினைகள் வராமல் குறைக்கும். இதனடிப்படையில் இந்த திட்டம் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில்நகர மன்ற தலைவர்புவனப்பரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், அரசு அலுவலர்கள், அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பண்டிகை நாளையொட்டி

## 36,578 நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைப்பு!

### உணவு - உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, நவ. 9-

தீபாவளியை முன்னிட்டு 2.64 இலட்சம் மெ.டன் அத்தியாவசியப் பொருள்கள் அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமோலின் 36,578 நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி 07.11.2023 அன்று சென்னை இந்திரா நகர் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடியில் வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1 கிலோ வெங்காயம் ரூ.30 என்ற விலையில் விற்கப்படுவதை ஆய்வு செய்து வாடிக்கையாளர்களிடம் கலந்துரையாடினார்கள். அமுதம் மக்கள் அங்காடி மூலம் சென்னையில் 10 அங்காடிகளில் வெங்காயம் மலிவு விலையில் விற்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு மற்றும் பாமோலின் ஆயில் ஆகியன தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக கொள்முதல் செய்து 355 கிடங்குகளில் இருப்பில் வைத்து 36,578 நியாய விலை அங்காடிகளின் மூலம் 2,23,86,333 குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாட்டில்உள்ளநியாயவிலை அங்காடிகளுக்கு 2,28,191 மெ.டன் அரிசி, 19,170 மெ.டன் சர்க்கரை, 5,321 மெ.டன் கோதுமை, 10,972 மெ.டன் துவரம் பருப்பு, 1 கோடியே 12 இலட்சம் பாமோலின் பாக்கெட்டுகள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பொருள்கள் இரண்டு நாள்களில் அனுப்பி முடித்து வைக்கப்படும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை ஒதுக்கீட்டின்படி கிடங்கில் இருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டிருப்பதையும், அங்காடிகளில் போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நல்ல தரத்துடன் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதையும், சென்னை தரமணியில் உள்ள அமுதம் நியாயவிலை அங்காடிகளில் அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் சரஸ்வதி மஹால் மற்றும் நூலகங்கள்!

### சட்டப் பேரவை நூலகக்குழு தலைவர் எஸ்.சுதர்சனம் ஆய்வு!

தஞ்சாவூர் நவ.9-

தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள நூலகம் மற்றும் அரசுத் திட்டப் பணிகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகக் குழு தலைவர் எஸ்.சுதர்சனம் தலைமையில், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் க.கணபதி, வே.சம்பத்குமார், கே.எஸ். சரவணக்குமார், செ.ஸ்டாலின்குமார், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம் ஆகியோரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் சட்டப்பேரவை செயலக நூலகக்குழுத் தலைவர் எஸ்.சுதர்சனம் நூலகக்குழு உறுப்பினர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சுரஸ்வதி மகாலில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் மாவட்ட மைய நூலகத்தில் ஆய்வு செய்த நூலகக்குழுத் தலைவர் ஏராளமான மாணவ, மாணவியர்கள் நூல்கள் படித்துக் கொண்டிருந்ததை பார்வையிட்டு, மைய நூலகத்தில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தனர். மேலும் போட்டித்தேர்வுக்கு தயாராகும் மாணவ, மாணவர்களுக்கு தேவையான புத்தகங்களை வழங்கினார்கள்.

பின்னர் கூட்டுறவு காலனியில் செயல்படுகின்ற கிளை நூலகத்தையும், அழகம்மாள்புரம் கிளை நூலகத்தையும் சட்டப்பேரவை நூலகக்குழுத் தலைவர் எஸ். சுதர்சனம், அரசு தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன், மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப் முன்னிலையில் நூலகக்குழுத் தலைவர், நூலகக்குழு உறுப்பினர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நூலகக்குழு தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற நூலகக்குழு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நூலகங்களை இன்று பார்வையிடப்பட்டது. ஆதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் மாவட்ட மைய நூலகம், தஞ்சாவூர் நகரம் கூட்டுறவு காலனி கிளை நூலகம் மற்றும் அழகம்மாள் நகரில் அமைந்துள்ள நூலகம் ஆகிய நூலகங்கள் நேரில் பார்வையிட்டு நூலகத்தில் குறிப்புதவி பகுதி, நூல்கள் படிக்கும் பகுதி, நாளிதழ்கள், பருவ இதழ்கள் படிக்கும் பகுதி, குழந்தைகள் பிரிவு, ஒவ்வொரு மாதமும் வாசகர் வட்ட கூட்டம் நடத்தப்பட்டு வருகிறதா, வாசகர்கள், உறுப்பினர் சேர்க்கை, அனைத்து நூலகத்திலும் றகை் வசதி, செய்தித்தாள் படிக்கும் பிரிவு, நூல் இரவல் வழங்கும் பிரிவு, குடிமைப்பணி பிரிவு, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, புதிய நூல்கள் பிரிவு, தமிழிசை நடனம் மற்றும் நுண் கலைகள் குறித்த சிறப்பு நூலகம், மாற்றுத்திறனாளிகள் பிரிவு, சிறுவர்கள் பிரிவு, மகளிர் பிரிவு, பார்வையற்றோர் பிரிவு, கணிப்பொறி பிரிவு ஆகிய நூலகத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் அரியவகை ஓலைச்சுவடிகள், புத்தகங்கள் இன்றும் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நூலகத்தின் மூலம் நமது வரலாறுகளை அறிந்துக் கொள்ள மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேலும் வாசகர்களின் கோரிக்கைகள் கேட்டறிந்து விரைவில் அனைத்துக் கோரிக்கைகளும் தீர்வு காணப்படும், இவ்வாறு எஸ். சுதர்சனம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, மாவட்ட நூலக அலுவலர் முத்து, தமிழக சட்டப்பேரவை நூலகக்குழு அலுவலர் ரா. இராஜேந்திரன், நூலகர்ஜேக்கப் சந்தானராஜ், உதவி நூலகர் கோ. டேனியல் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் சிறப்புரை!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பேச்சு - கட்டுரைப் போட்டி!

### பூவை சி.ஜெரால்டு - ஜெ.வீரமணி - ஆ.கலைச்செல்வன் பங்கேற்பு!

புதுக்கோட்டை., நவ.9-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி மாநில அளவிலான பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டி (04.11.2023-சனிக்கிழமை) ஸ்ரீ சுப பாரதி கலை அறிவியல் கல்லூரி கைக்குறிச்சி புதுக்கோட்டை யில் புதுக் கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் வரவேற்புரையாற்றினார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, ஜெ. வீரமணிஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட கழக நிர்வாகிகள் ஞான. இளங்கோவன், அ.ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.அடைக்கலம், ஜெ.அபதாஹிர், ஒன்றிய கழக செயலாளர்கள் அரு. வடிவேல், கே.பி.கே.டி.தங்கமணி, சக்தி இராமசாமி, பொன்.கணேசன், எஸ்.எம். சீனியார் (ஏ) முகமது அப்துல்லா, அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறப்பினர் ஆர். ஆர்.கே.கலைமணி, பொதுக் குழு உறுப்பினர்கள் என். வீரையா, கே.எம்.சுப்பிரமணியன், ஒன்றியகுழு, பேரூர் தலைவர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள்:

த.மணிராஜன், கே.ஆர். ராமசாமி, கருணாகரன், ஹரி விமலாதி, ஆர்.மேகநாதன், கோ.சக்தி வேல், மு. தேவி, ஏ.பாத்திமா பீவி, இரா.தமிழ்ராசு, முகம்மது ரபீக், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ப.ராஜமாணிக்கம், ஆர்.எம்.கே.கார்த்திக்குமார், ஆர்.ஜெய.கிருஷ்ணராஜ், கை.உதயசூர்யா மற்றும் கே.வி.சுப்பையா, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதி கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ். ராஜ பெரியண்ணன் நன்றி கூறினார்.





பெரம்பலூர் மாவட்டத்தில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி,பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த போட்டிக்கு கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தர்ராஜ் தலைமை வகித்தார். துணை அமைப்பாளர் தர்ம.பூபதி வரவேற்புரையாற்றினார். கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட தலைவர் சி. முத்தரசன் முன்னிலை வகித்தார். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் வண்ணை.அரங்கநாதன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### க.இராஜேந்திரன் தலைமையில் விழா!

## நாகை ஒன்றியத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - என்.கௌதமன் முன்னிலையில்!

நாகை.நவ.9.

நாகை மாவட்டம் நாகை தெற்கு ஒன்றியம் பாப்பாக்கோயில், வடுகச்சேரி, வடவூர், ஒரத்தூர் ஊராசிகளைசேர்ந்த 369 பேர் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பாப்பாக்கோயிலில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான க.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகன், ஒன்றியக் குழு தலைவர் அனுசியா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக்குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில் பாப்பாக்கோயில் ஊராட்சியில் இருந்து 153 பேரும், வடுகச்சேரி ஊராட்சியில் இருந்து128 பேரும், வடவூர் ஊராட்சியில் இருந்து 8 பேரும், ஒரத்தூர் ஊராட்சியில் இருந்து 80பேரும் என 369 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி சட்டதுறை அமைச்சர் எஸ். ரகுபதி, நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சுந்தர பாண்டியன், ஒன்றியஅவைத்தலைவர் சீனிவாசன், ஒன்றிய துணைச் செயலாளர் திருநாவுகரசு, பிச்சை ஒன்றிய பொருளாளர் ஆர்.காமராஜ் மாவட்ட பிரதிநிதிகள் எஸ். கே.தமிழ்ச்செல்வம், ஊராட்சி மன்ற தலைவர்கள் லெட்சுமிபாலகிருஷ்ணன், எம்.முருகானந்தம், ஜான்சிராணிசெந்துரை மற்றும் பாண்டியன், சேகர்ப, பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கிழக்கு மண்டல தி.மு.க நெசவாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கும்பகோணத்தில் நடைபெற்ற மாபெரும் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை திருவிழாவை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், மாநில நெசவாளர் அணி நிர்வாகிகள் நன்னியூர் இராஜேந்திரன், ஓ.எ.நாகலிங்கம், எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி.கே. மணி, ஆ.ராமசாமி, தஞ்சை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் உள்ளனர்.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் குடிநீரான கடல்!**



# 43 இடம் பொருள் கலைஞர்





# குடிநீரான கடல்!

## தாகம் தணித்த தெற்காசியாவின் முன்னோடித் திட்டம்!

‘உன்னை தண்ணியில்லாத காட்டுக்கு மாத்திடுவேன்’ என்பது சினிமாவில் உயர் அதிகாரிகள் சொல்லும் ஒரு வசனம். அந்த தண்ணியில்லாத காடு என்பது கடலால் சூழப்பட்ட இராமநாதபுரம் மாவட்டமாகக் காட்டப்பட்டது தமிழ் சினிமாவின் நகைமுரண்.

அந்தத் ‘தண்ணியில்லாத காட்டில்’, கடலைச் சுத்திகரித்துக் குடிநீர் வழங்கியது முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான கழக அரசின் மகத்தான சாதனை.

தமிழ்நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக ஒரு காலத்தில் இராமநாதபுரம் மாவட்டம் இருந்தது. அங்கு கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள மக்கள் குடிநீருக்கு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். நிலத்தடி நீர் உப்பாக இருக்கின்ற காரணத்தால், கண்மாய் மற்றும் குளம், குட்டைகளில் உள்ள நீரைப் பருகி, நரம்புச் சிலந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் தோல் நோய் போன்றவற்றால் அவதிப்பட்டு வந்தனர். எங்கே பிரச்சினை இருக்கிறதோ, அந்தப் பிரச்சினைக்கான தீர்வும் அங்கே இருந்துதான் கிடைக்கும் என்பது அறிவியல் மொழி. அப்படித்தான் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் சிந்தித்தார் கலைஞர்.

### தெற்காசியாவிலேயே முதல் முறை

இராமநாதபுரம் மக்களின் குடிநீர்த் தேவையைப் போக்குவதற்கு, கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய மூன்று ஒன்றியங்களில் இருந்த 296 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்காக, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, சாயல்குடி அருகிலுள்ள நரிப்பையூரில் ரூ.55.22 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ‘பெல்’ நிறுவனமும் இணைந்து செயல்படுத்தின. இதன் மூலம் ஒரு இலட்சத்து 83 ஆயிரம் மக்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது நிறைவேறவும் செய்தது. அப்போது 45 சுத்திகரிப்பு நிலையங்கள் இருந்தன. அதில் நரிப்பையூர் சுத்திகரிப்பு நிலையம்தான் மிகப் பெரியது. அதன் மதிப்பு மட்டும் ரூ.32.14 கோடியாகும்.

> இராமநாதபுரத்தைத் தொடர்ந்து, 2006-2011 ஆட்சிக் காலத்தில் மீஞ்சூர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவையும் நிறைவேற்றப்பட்டு, கலைஞரின் பெயர் சொல்கின்றன.

முதல் கட்டமாக அந்தத் திட்டத்தில் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 300 பேரும், இரண்டாம் கட்டமாக 7 இலட்சத்து 7 ஆயிரத்து 700 பேரும் பலன் பெறுவார்கள் என்று கணக்கிடப்பட்டது. இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரும் முன்பு, ஒரு நபருக்கு சுமார் 5 லிட்டர் தண்ணீர் மட்டுமே கிடைத்து வந்தது. இந்தத் திட்டம் வந்த பிறகு, ஒரு நபருக்கு 13 லிட்டர் தண்ணீர் கிடைத்தது. இப்படி ஒரு திட்டம் அன்றைக்கு, தெற்காசியாவிலேயே முதன்முறையாக இங்குதான் செயல்படுத்தப்பட்டது.

### பிற மாநிலங்களுக்கு வழிகாட்டி

இந்தத் திட்டத்தைத் தலைவர் கலைஞர் அவர்கள் 1999 ஜூன் 25 அன்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் தனது உரையில், “இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏதோ ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்றாலும் கூட, அது உலகளாவிய நிலையில் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க, வியப்போடு உற்றுநோக்கத்தக்க ஒரு மாபெரும் திட்டம்” என்றார்.

மேலும் அவர், “நான் தம்பி கோ.சி.மணியிடத்திலும் மற்றவர்களிடத்திலும் குறைபட்டுக் கொண்டேன். இதை இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களிலே உள்ள பத்திரிகையாளர்கள் எல்லாம் பார்த்திட வேண்டும். அவர்களை எல்லாம் நீங்கள் அழைத்திருக்க வேண்டும். அவர்களை அழைப்பது இந்தத் திட்டத்திற்கான விளம்பரத்தைப் பெறுவதற்காக அல்ல. நாம்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக இதைச் செய்து முடித்திருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்வதற்காக அல்ல. இதைப் பார்த்து மற்ற மாநிலங்களிலும் கடல்நீரை, உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக ஆக்கி, பாதுகாக்கப்பட்ட தண்ணீராக மாற்றி, ஏழை எளிய மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்குத் தருவதற்கு ஒரு வழிகாட்டியாக இது அமையும். ஆகவே, மற்ற மாநிலப் பத்திரிகையாளர்களையும் நீங்கள் அழைத்திருக்க வேண்டும் என்று நான் அவர்களிடத்திலே குறிப்பிட்டேன்” என்றார்.

அப்படி, எந்த ஒரு பெரிய ஊடக விளம்பரமும் இல்லாது, உலகமே வியந்து பார்த்த திட்டத்தை, அமைதியாகச் செய்து முடித்தது கழக அரசு.

### உலக சுகாதார நிறுவனத்தின் தரம்

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது, விஷமிகள் சிலரால், ‘இந்தக் கடல் நீரை குடிநீராக மாற்றிக் குடித்தால் சிறுநீரகக் கோளாறு, நுரையீரல் கோளாறு மற்றும் தலைமுடி உதிர்தல், செம்பட்டை முடியாகுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன’ என்று சொல்லி வதந்தி பரப்பப்பட்டது.

இவற்றுக்கு மறுப்புத் தெரிவித்து, அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கோ.சி.மணி விடுத்த அறிக்கையில், “இந்த வதந்திகள் எல்லாம் விஷமத்தனமானது. கற்பனையானது. விஞ்ஞான ரீதியாக உண்மைக்குப் புறம்பானது” என்று கூறி, கடல்நீரைக் குடிநீராக்குவதில் உள்ள விஞ்ஞானத்தைப் பற்றிப் பின்வருமாறு விளக்கினார்.

“அரபு மற்றும் இஸ்ரேல் நாடுகளில் இதே திட்டம் இதே முறையில் கடல்நீர் சுத்திகரிக்கப்பட்டு நன்னீராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மற்றும் நம் தமிழ்நாட்டில் இதே முறையில் சென்னை அருகே நொச்சிக்குப்பத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் சிக்கல், குண்டுகுளம், கரிசல் புளி, பூசேரி, கருமல், ஏனாதி, சீராந்தை, நல்லிருக்கை, மேலச்சிறுபோது ஆகிய இடங்களில் இதே முறையில் உவர் நீர் சுத்திகரிக்கப்பட்டுக் கடந்த பத்து ஆண்டுகளாக மக்களால் விரும்பி குடிநீராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை எந்தவிதமான குறைபாடுகளும் மக்களால் சொல்லப்படவில்லை.

மேலும், பனைக்குளம், பொட்டகவயல், உத்திரகோசமங்கை, உரத்தூர், பெருங்குளம், கீழாம்பல், கிடாதிருக்கை, கீழ்ப்பருத்தியூர் ஆகிய இடங்களில் இதே முறையில் சுத்திகரிக்கப்பட்டுக் கடந்த ஒரு வருடமாக மக்களால் மிக நல்ல முறையில் மிகவும் விரும்பிப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் குடிப்பதற்கான குடிநீருக்குண்டான தர நிர்ணய வரம்புக்குள் இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக் குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு வழங்குவதற்கு ஒரு லிட்டருக்கு 12 பைசா செலவாகிறது. ஆதலால், இந்நீரைக் குடிநீருக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த சுத்தமான குடிநீரைப் பருகுவதால் நீரினால் பரவக்கூடிய எந்த நோயும் பரவாது” என்று விளக்கமளித்தார்.

ஆரம்பகால சந்தேகங்கள், வதந்திகள், விமர்சனங்கள் என எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, இன்றளவும் பல லட்சக்கணக்கான மக்களின் தாகத்தைத் தணித்து வருகிறது கலைஞர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்பு!

**...வலம் வருவோம்**

## வாசிப்பை விரிவுபடுத்திய சோவியத் இலக்கியம்!

**சோ**வியத் மொழிபெயர்ப்பு இலக்கியங்களை வாசிக்காத எழுத்தாளனும் வாசகனும் இருக்க முடியாதென்றே நினைக்கிறேன். சோவியத்தில் வெளியான இலக்கியங்கள் இன்றைய தலைமுறை வாசகர்களையும் சென்றடைந்திருக்கிறது என்பதே நிதர்சனம். ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட ‘டால்ஸ்டாய் நாவல்கள்’ இப்போதும் பல பதிப்பகங்களால் வெளியிடப்படுவதல்லாமல் புதிய மொழி பெயர்ப்புகளும் செய்யப்படுகின்றன.

‘மாக்சீம் கார்க்கி’யின் ‘தாய்’ நாவலைப் பத்துக்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளதோடு, அவை இப்போதும் சந்தையில் கிடைக்கின்றன. ‘தஸ்தயேவ்ஸ்கி’யின் ‘வெண்ணிற இரவுகள்’ நாவலை வெளியிட்ட பதிப்பகங்களின் எண்ணிக்கையில் அடங்காது. இவை மட்டுமல்ல, இன்னும் பல படைப்புகளும் அவ்வாறே. இலக்கியம் மட்டுமின்றி, அரசியல், குழந்தைகளுக்கான எழுத்துகள், அறிவியல் என சோவியத் ரஷ்யாவில் பல துறைகளில் உலகின் பல மொழிகளிலும் புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

இன்னொரு முக்கியமான விஷயம் சோவியத்தில் வெளியான புத்தகங்கள் அச்சிட்டத் தாளை மறுசுழற்சி செய்ய இயலாது. அதனால்தான் இப்போதும் கூட பழைய புத்தகக் கடைகளில் ராதுகா பதிப்பகம், மாஸ்கோ பதிப்பகம், முன்னேற்ற பதிப்பகம் வெளியிட்ட நூல்கள் கிடைக்கின்றன.

வாசிப்பை விரிவடையச் செய்ததில் சோவியத் புரட்சிக்கு மகத்தான பங்கு உண்டு என்பதை எந்த எழுத்தாளனும், வாசகனும் மறுதலிக்க இயலாது.

**- பதிப்பாளர் முகமது சிராஜுதீன் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்



### கொள்கைப் பயிற்சி!

2000-ஆம் ஆண்டு, கரூர் மாவட்டம், நன்னியூரில் இளைஞர் அணி பாசறைக் கூட்டம் மூன்று நாள் நிகழ்வாக நடைபெற்றது. தமிழ்நாடெங்கிலுமிருந்து வந்திருந்த இளைஞர்கள் அந்தக் கூட்டத்தில் பங்கேற்று கொள்கைப் பயிற்சி பெற்றனர். கடைசி நாளில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் சென்னை மாநகராட்சி மேயருமான தளபதி அவர்களின் கரங்களால் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அப்படியான தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. உடன் இன்றைய கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களும் இடம்பெற்றுள்ளார்கள்.



ஜானகிராமன்

**-வி.எம்.ஜானகிராமன், வட்ட கழக முன்னாள் பிரதிநிதி, பொன்மலை பகுதி, திருச்சி தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் வலிமை!

**1957-ஆம் ஆண்டு குளித்தலை பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். “சட்டமன்றத்தில் கழகத்தை மற்றவர்கள் மதிக்க வேண்டுமானால், கழகம் அமைப்பு ரீதியாக பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும். கழகம் சட்டசபைக்கு வெளியில் இன்னும் பலமானதாகக் கட்டி வளர்க்கப்பட வேண்டும். கழகம் வெளியில் பலமானதாக இருந்தால்தான் சட்டசபைக்குள் நாங்கள் நிம்மதியாகப் பணியாற்ற முடியும். சட்ட சபையில் எங்களுக்குப் புதிய வலிவும், அந்தஸ்தும் கிடைக்கும்” என முழங்கினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 295




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131